குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

லர் 28 ] கீலக ஆண்டு மாசித்திங்கள் 10—3—69 [இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் எழுந்தருளியிருக்கும்



ஸ்ரீ வன துர்க்காதேவி

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர்

### அருள்வாக்கு

அவரவருக் குள்ளபடி
ஈசனரு ளாலே
அவரவரைக் கொண்டியற்று
மானால் — அவரவரை
நல்லார்பொல் லாரென்று
நாடுவதென் ? நெஞ்சமே
எல்லாம் சிவன்செயலென்
றெண். (73)


ஆசிரியர் :

வித்துவான்
சோமசுந்தரத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :

வித்துவான்
அருணைவடிவேல் முதலியார்



உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 28 | 10–3–69 | இதழ் 4


## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | தசபுராணம் | ... 177 |
| 2 | அறநெறியும் அருள்நெறியும் | ... 181 |
| 3 | சித்தாந்த வினாவிடை | ... 191 |
| 4 | தஞ்சைமாநகரில் பிற்காலச் சோழ மன்னர்களுக்கு மாளிகை இருந்த இடம் | ... 195 |
| 5 | சங்கநூல்களில் சிவன் | ... 199 |
| 6 | "கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்" | ... 206 |
| 7 | பேரருள் இன்பம் பெற்றாள் | ... 211 |
| 8 | சுக்கிரன் | ... 214 |
| 9 | சோழ வேந்தர் சமயப் பணி | ... 219 |
| 10 | சிவாகம ஸார ஸர்வஸ்வம் | ... 225 |
| 11 | மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் | ... 229 |
| 12 | செய்திகள் | ... 231 |
| 13 | இலவச சித்த வைத்தியசாலை | ... 232 |
| 14 | எதிர்காலம் | ... 236 |
| 15 | Extract from the Visitor's Book | ... 180 |
| 16 | கடிதம் | ... 239 |
| 17 | மதிப்புரை | ... 240 |

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 28 ] கீலக - மாசி - 10—3—69 [ இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் ! பிஞ்ஞகா ! பிறப்பிலீ !
கொன்றையம் முடியினாய் ! கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## தச புராணம்

கடவுட் கொள்கையில் தொன்றுதொட்ட கருத்துக்களை விளக்குவன புராண வரலாறுகளே அவை நூல்களில் மட்டு மன்றி உலக வழக்கிலும் மக்களிடையே பரவலாக வழங்கி வருவன. அதனால், பொதுமக்கள் உள்ளத்தில் கடவுட் கொள்கையை வேரூன்றச் செய்வனவும் புராண வரலாறுகளே. கடவுட் கொள்கையை வெறுப்பவர்கள் முதலில் புராணங்களில் மக்கட்கு வெறுப்பை உண்டாக்க முயல்வதும் இதுபற்றியே யாகும். புராண வரலாறுகளை, 'கட்டுக் கதைகள்' என்று

பொதுமக்கள்முன்னே சொல்கின்ற அவர்கள், தங்கள் கொள்கையை மக்களிடையே பரவச் செய்வதற்கு எண்ணற்ற கட்டுக் கதைகளைப் பலவாகப் படைப்பதைப் பார்க்கலாம். ஆகவே, 'படைத்து மொழிவதை அவர்கள் வெறுக்கவில்லை; அப் படைத்து மொழிதல் வாயிலாக வலியுறுத்தப்படுகின்ற கொள்கையையே வெறுக்கின்றார்கள்' என்பது தெளிவாகின்றது.

தத்துவ நூல்களினால் விளையும் பயனைவிடப் புராணங் களால் மற்றொரு சிறந்த பயனும் விளைகின்றது. அஃதாவது, பத்திப் பெருக்கு. தத்துவ நூல்கள் பொருளியல்புகளை அலசி ஆராய்வன. அதனால், அவற்றை உணருமிடத்து ஆராய்ச்சி அறிவு அல்லது அளவை அறிவே மிக்கோங்கிநிற்கின்றது. ஆயினும் இறைவன் ஏனைய பொருள்கள்போல அளவை அறிவுள் அகப்படுபவனல்லன். அதனால், ஆராய்ச்சி அறிவு ஒன்றினாலே இறைவனை அறிய விரும்புவோர், இறுதி வரையில் ஐயத்தோடே நிற்கின்றனர். அவருட் சிலர், 'இறைவன் ஒருவன் இல்லை' என்கின்ற விபரீத முடிவிற்கும் வந்து, அதனையே எங்கும் பரப்புதற்கும் முற்பட்டுவிடுகின்றார்கள். இதனால், 'தத்துவ ஆராய்ச்சி கூடாது' என்பது பொருளன்று. தத்துவ ஆராய்ச்சியை அனுபூதிமான்களது அருள்மொழிகளின் சார்பில் மேற்கொள்ளுதல் வேண்டுமன்றித் தனியாக மேற் கொள்ளுதல் கூடாது என்பதே பொருள். தத்துவ ஆராய்ச்சி ஒன்றினாலே இறைவனைக் காண நினைப்பவரை நோக்கியே திருஞானசம்பந்தர்,

> "ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
> சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன் எங்கள் சோதி"

என்று அருளிச்செய்தார். தத்தவநூல் உணர்வு ஒன்றினாலே இறைவனைக் காண முயல்வோர் அல்லல் ஒன்றையே பயனாகப் பெற்று அலமருதல் பற்றியே காரைக்கால் அம்மையார், தமது அற்புதத் திருவந்தாதியில்,

> "நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக"

என்று அருளினார். நுழைவிலாதார் - கடவுள் உண்மையில் மனம் பற்றாதவர்கள். இவர்களை நோக்கியே ஞானசம்பந்தர் மேற்குறித்த திருப்பாட்டில்,

" மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின் "

என்று அறிவுறுத்தருளினர். 'திருக்களிற்றுப்படியார்' என்னும் சாத்திரமும், 'தத்துவநூல் ஆராய்ச்சி ஒன்றே மன அமைதியைத் தந்துவிடாது' என்பதை,

"சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் றன்வசன
மாத்திரையின் வாய்க்குமலம் வந்துறுமோ—ஆர்த்தகடல்
தண்ணீர் அருந்தினர்க்குத் தாகந் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாய்இதனைச் செப்பு"

என விளக்குகின்றது. எனவே, அல்லல் ஏதும் இன்றி, இறையருளில் மனம் பற்றி வாழ்ந்து, பத்திப் பெருக்கில் திளைக்கச் செய்வன புராணங்களாகின்றன. அதனாலே, ஞானசம்பந்தர், நாவுக்கரசர் முதலிய அருளாசிரியர் பலரும் புராண வரலாறுகளை எங்கும் மிகுதியாக எடுத்தோதியருளினர்கள். ஞானசம்பந்தர், தமது திருப்பாசுரத் திருப்பதிகத்திலும் ஒரு திருப்பாட்டில் புராணங்களின் இன்றியமையாமையை எடுத்தருளிச்செய்தார்.

புராணங்களின் இத்தகைய சிறப்பு நோக்கித் திருநாவுக்கரசர் தமது தேவாரத் திருப்பதிகத்தில் 'தச புராணம்' என்றே ஒரு திருப்பதிகம் அருளிச்செய்து, அதில் சிறந்த சில புராண வரலாறுகளை ஒரு திருப்பாட்டிற்கு ஒரு வரலாருகச் சுட்டியுணர்த்தியருளினர். அத்திருப்பதிகத்தை 'தசபுராணத்து அடைவு' எனக் குறித்தருள்கின்ருர் சேக்கிழார். அடைவு-முறை.

'தச புராணம்' அல்லது 'தச புராணத்து அடைவு' என்பது, மேற்போக்காகப் பார்க்கும் பொழுது, 'பதினெண் புராணங்களில் பத்துப் புராணங்கள் இத் திருப்பதிகத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன' என்ற எண்ணம் தோன்றும். அதற்குச் சிறந்த காரணம், 'பதினெண் புராணங்களில் சிவபுராணம் பத்து' என்னும் வகையில் அமைந்திருத்தலேயாகும். சிவ புராணம் பத்தாவன ;— சைவம், பவிடியம், மார்க்கண்டேயம், இலிங்கம், காந்தம், வாராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம் என்பன.

மேற்குறித்த திருப்பதிகத்தை நோக்குமிடத்து, இங்குக் குறிப்பிட்ட சிவபுராணங்கள் பத்தும் இதன்கண் குறிப்பிடப் படாமல், சிவபெருமானது பெருமையை விளக்கும் பத்துச் சிறந்த புராண வரலாறுகளே குறிக்கப்பட்டிருத்தல் தெளிவாகும். ஆகவே இங்கு, 'புராணம்' என்பது ஆகுபெயராய்ப் புராணங்களில் சொல்லப்பட்ட பத்து வரலாறுகளைக் குறிப்பதாம்.

நாவுக்கரசர் சிவபெருமானைத் துதிக்கும் தோத்திரங்களை அருளிச்செய்ததோடு, மக்கட்கு அறிவுறுத்தருளும் அருந்திரு மொழிகளாகப் பல திருப்பதிகங்களை அருளிச்செய்துள்ளார். அவற்றுள், இத் தச புராணத் திருப்பதிகத்தையும் அருளிச் செய்திருப்பாராயின், புராணங்களின் பெருமை எத்தகையது என்பது விளங்கும். அதனால், அத்திருப்பதிகத்தின் வழியும், பிற அருட்டிருமொழிகளின் வழியும் புராண வரலாறுகளை நன்குணர்ந்து பயன் பெறுவோமாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Thiagarajaswamy Devasthanam, Tirukkuvalai.

I visited this temple to-day with my friends. I am very much impressed with the manner the temple is maintained.

(Sd.) A. Krishnaswamy Reddy,
Judge, High Court,
Madras.

1—3—69.

உ
குருபாதம்

## குருவருள்

# அறநெறியும் அருள்நெறியும்

### "வினை நீக்கம்"

இந்திய நாட்டு மதங்களில், 'உலகாயதம்' என்னும் நாத்திக மதம் தவிர ஏனைய எல்லா மதங்களும் சில பொருள் களில் ஒரே கருத்துடையனவாய் இருக்கின்றன. அப்பொருள் களாவன :—

உடம்பு உயிரன்று; உயிர் உடம்பிற்கு வேறானதே. அதனால், உடம்பு அழிந்தபின்பும் உயிர் அழியாது நின்று, வேறோர் உடம்பை எடுக்கும்; அதுவே 'மறு பிறப்பு' எனப் படுவது. எடுக்கப்பட்ட உடம்பு அழிவதே 'இறப்பு' எனப் படுகின்றது. எனவே, பிறப்பு, இறப்பு, அதன்பின் பிறப்பு, மீள இறப்பு என்று இவ்வாறு மாறி மாறி வரும் சுழற்சியில் அகப்பட்டு உயிர் உழல்வதாகின்றது.

பிறப்பிறப்புக்களும், அவற்றில் நிகழும் இன்பத் துன்பங் களும் காரணம் இன்றி இயற்கையாய் வேண்டியவாறு நிகழ்வன அல்ல. அவை அனைத்தும் 'வினை' அல்லது 'கன்மம்' என்னும் ஒரு பெரிய காரணத்தின்வழி நிகழ்வனவே. எனினும், வினை யென்னும் காரணம் என்றும் உயிர்களைப் பற்றியிருப்பதன்று; ஒருகாலத்தில் நீங்கக் கூடியதே. அது நீங்கினால் உயிர் பிறப் பிறப்பாகிய சுழற்சியினின்றும் நீங்கி நிலைத்து நிற்கும். அந்நிலையே 'வீடு பேறு' அல்லது 'முத்தி' எனப்படுவது. உயிர் நித்தியப் பொருள்; அதனால் அழிவது உடம்பேயன்றி உயிரன்று. பிறப்பு இறப்புக்களாகிய சுழற்சியே, 'கட்டு' அல்லது 'பந்தம்' எனப்படும். பந்தமாகிய பிறப்பு நிலை துன்பமே. வீடாகிய பிறப்பற்ற நிலையே இன்பம். அதனால், பிறப்பினின்றும் நீங்கி வீடுபெற முயல்வதே அறிவுடைமை யாகும். அஃதாவது, வினைநீங்காமல் பிறப்பு நீங்குதல் கூடாமையால், முன்னர் வினையினின்று நீங்கிப் பின்னர்

அதுவழியாகப் பிறப்பினின்றும் நீங்குவதே அறிவுடைமை என்பதாம். இப்பொருள்கள் எல்லாம் பெரும்பாலும் இந்திய நாட்டு மதங்கள் பலவற்றிற்கும் உடன்பாடானவே. எனினும், வினையினின்றும் நீங்குதற்கு ஒவ்வொரு மதம் ஒவ்வொரு வழியைச் சொல்லுகின்றது.

பௌத்தமும், சமணமும், 'தன்னலத்தின் பொருட்டு யாதோர் உயிர்க்கும் தீங்கு செய்யாது எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டு அவற்றிற்குத் தன்னால் இயன்ற அளவில் நலம் செய்துவரின் வினை நீங்கும்' என்கின்றன. பிற உயிர்களிடத்தில் இரக்கம் உண்டாதலும், அவற்றிற்கு நலம் செய்தலும் உடம்பின்மீதும், அதைச்சார்ந்த பொருளின்மீதும் பற்றுக் கொள்ளாமல், உண்டி சுருக்கல், உடலை வருத்துதல் முதலிய நோன்புகளை மேற்கொள்வதனாலே நிகழும் என்பதும் அம்மதங்களின் கொள்கை. நோன்பு, பௌத்த மதத்தில் உள்ளதினும், சமண மதத்தில் மிகக் கடுமையாகக் கொள்ளப்படுகின்றது.

'மீமாஞ்சை' என்னும் மதம், பயன் கருதாது நல்லவற்றைச் செய்தால் வினை நீங்கும்' என்கின்றது. ஆயினும், வினை நீங்குதற்கு வழியாகத் திருவள்ளுவர் என்ன கூறுகின்றார் என்று பார்த்தல் வேண்டும். 'இறைவனது பொருள்சேர் புகழை எப்பொழுதும் விருப்பத்துடன் சொல்லுதல் வேண்டும்' என்பதையே அவர் வினை நீக்கத்திற்கு வழியாகக் கூறுகின்றார்.

> " இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு "

என்பது அக்குறள். அதனுள் அவர், 'வினைசேரா' என்று மட்டும் கூறாமல், " இருவினையும் சேரா " என்று கூறியிருப்பது நன்கு நோக்கற்பாலது.

இருவினையாவன 'நல்வினை தீவினை' என்பன. 'புண்ணியம், பாவம்' என்பன இவையே. இவை முறையே, 'அறம், மறம்' என்றும் சொல்லப்படும். 'வினை, இவ்வாறு இருவகையாய் நிற்கும்' என்பது யாவரும் அறிந்தது. இவற்றுள், 'தீவினை' என்றும், 'பாவம்' என்றும், 'மறம்' என்றும் சொல்லப்படுகின்ற ஒன்றே தீங்கு தருவது; அதனால் நீங்க வேண்டுவது அஃதே; நூல்களும் 'ஆகாது' என விலக்குவது அதனையே

என்று பலர் கருதுவதுடன் 'நல்வினை' என்றும், 'புண்ணியம்' என்றும் 'அறம்' என்றும் சொல்லப்படுகின்ற அது நன்மைதருவதொன்று; அதனால் அதனைவிடாது பற்றுதல்வேண்டும் என்றும் கருதுவர். அங்ஙனமாக, திருவள்ளுவர், 'நல்வினை தீவினை' என்னும் இருவகை வினைகளுமே நீங்குதல் வேண்டும் என்று கூறுவாராயின், அது வியப்பைத் தருவதொன்றாகவன்றோ உள்ளது! அதனால், அதனை நன்கு ஆராய வேண்டுவதாகின்றது.

நல்வினையாயினும் தீவினையாயினும், 'மனம், மொழி, மெய்' என்னும் முக்கரணத்தின்வழியே நிகழும். அவற்றுள், மனத்தின்வழி நிகழும் நல்வினைகள், அன்பு, அருள், நடுவுநிலைமை, அடக்கம், பொறுமைஇன்மை, வெஃகாமை (பிறர் பொருளை விரும்பாமை) முதலியன. இவை தரும் நன்மைகள் யாவை என நோக்குமிடத்து, 'அன்பு நண்பைத் தரும், வையக இன்பத்தையும் வானக இன்பத்தையும் தரும், அருள் இருள் சேர்ந்த இன்னா உலகம் (நரகம்) புகாது தடுத்து இன்ப உலகத்திற் சேர்க்கும், அருளாள்வார்க்கு அல்லல் இல்லை, நடுவுநிலைமை யுடையவனது செல்வம் அழியாது தன் வழியில் உள்ளார்க்கும் பயன் தந்து நிற்கும், நடுவுநிலைமை யுடையவனுக்குப் பிறக்கும் மக்கள் நன் மக்களாய் இருப்பர், அடக்கம் அமரருள் உய்க்கும், பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழ், பொறுமை இல்லாதவர்க்குச் செல்வம் நீங்காது' வெஃகாமை செல்வத்தை அஃகாமை (சுருங்காமை) செய்யும், எனக் கூறுகின்றார் திருவள்ளுவர்.

இனி, மொழிவழியாக நிகழும் நல்வினைகள், இன்சொல், வாய்மை முதலியன. அவற்றுள் இன்சொல் வறுமையை நீக்கிச் செல்வத்தைக் கொடுக்கும், இம்மை மறுமை இன்பங்களைப் பயக்கும். வாய்மை உலகத்தார் உள்ளத்தினெல்லாம் உளனாகச் செய்யும், மனத்தூய்மையைத் தரும், மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும் (மக்கட் பேறு நல்லனவாக வாய்க்கும்)' என்று அவர் கூறுகின்றார்.

அப்பால் 'மெய்வழியாக நிகழும் நல்வினைகள் யாவை' என நோக்கின், விருந்தோம்பல், ஒழுக்கம், ஈகை, புலால் உண்ணாமை, கொல்லாமை, கள்ளாமை முதலியன. 'இவற்றுள்,

விருந்தோம்பலைச் செய்வான் இல்லத்தில் திருமகள் மன மகிழ்ந்து வாழ்வாள்; அதனால் அவன் வாழ்க்கை வறுமை யுட்படாது செல்வச் செழிப்புடன் விளங்கும், அவன் பின்னர்த் தேவர்கட்கு நல்விருந்தினனாவான். ஒழுக்கம் விழுப்பம் தரும், ஒழுக்கம் குடிமையைத் தரும். தன் பொருளை வறியவரது பசியைத் தணிக்கச் செலவிட்டவன், அதனை மறுபிறப்பில் ஒன்றிற்குப்பன் மடங்காகப்பெறுவான். பொருளை வறியவர்க்குப் பகுத்துக்கொடுத்து உண்பவனைப் பசி என்னும் தீப்பிணி தீண்டாது. புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந் தொழும். கொல்லாமை மேற்கொண்டொழுகுவான் வாழ்நாள் மேற் செல்லாது உயிருண்ணும் கூற்று. கள்ளார்க்குப் புத்தேள் உலகும் (தேவலோகமும்) தள்ளாது (தப்பாமற் கிடைக்கும்)' என்பன திருவள்ளுவர் கூறுவன. இவை அனைத்தையும் உற்று நோக்கும்வழி, நல்வினை தரும் நலம் என்பன எல்லாம் மண்ணுலகில் மக்களாகவேனும், விண்ணுலகில் தேவராக வேனும் பிறப்பெடுத்த பின்னர் அடையும் சிறு நன்மைகளே யன்றி, பிறவிப்பெருந்துன்பத்தை நீக்கி உயிர் அலைவின்றி என்றும் ஒரு பெற்றியாய் நிலைத்து நின்று அடையும் பெரு நன்மையல்ல என்பது தெளிவாகும். ஆகவே, பிறப்பே பெருந் துன்பம் என்று அறியும் அறிவும், அதனால் அதனை நீக்கிக் கொள்ளும் விருப்பமும் இல்லாதவர்க்கே நல்வினை நல்லதாவ தன்றி, அவற்றை யுடையவர்க்கு நல்வினையும் தீவினைபோலத் தீமை தருவதேயாம் என்பது தேற்றம். ஆயினும், நூல்கள் 'நல்வினையைச் செய்க' என்று விதிப்பது, அதனையும் செய்ய மாட்டாது தீவினையே செய்து, மேற்கூறிய சிறு நன்மைகளையும் பெறமாட்டாது அதற்கு மறுதலையாய துன்பத்தை எய்தி அல்லற்படுகின்ற பொதுமக்களை நோக்கியேயாம். எனவே, திருவள்ளுவர், "இருவினையும் சேரா" என நல்வினையையும் தீவினையோடு ஒருபடித்தாகவைத்து 'நீங்கற்பாலது' எனக் கூறியது, பிறவிப் பெருந்துன்பத்தினின்றும் நீங்கிப் பேரின்பம் அடைய விரும்பும் பெருமக்களை நோக்கியாயிற்று.

நல்வினையேயாயினும், தீவினையேயாயினும் அவை உலகத் தைப் பொருட்படுத்தி நோக்கச் செய்வதன்றி உலகத்தைப் பொருட்படுத்தாது புறக்கணித்து மறக்கச் செய்வன அல்ல. தீவினை உலகத்தை வெறுப்புணர்ச்சியுடன், விடாது பற்றச் செய்கின்றது. நல்வினை உலகத்தை விருப்புணர்ச்சியுடன்.

விடாது பற்றச் செய்கின்றது. இவ்வளவே அவை இரண்டற்கும் உள்ள வேறுபாடு. எனவே, நல்வினை, தீவினை இரண்டும் உலக மாயையில் மேலும் மேலும் அழுந்தச் செய்வனவேயன்றி, அதினின்றும் விடுபடச் செய்வன அல்ல. அதனால், 'அவை இரண்டும் முறையே பொன்விலங்கும், இரும்பு விலங்கும் போல்வன' என்று ஆன்றோர் கூறுகின்றனர்.

ஒருவனுக்குக் கையிலும், காலிலும் விலங்கு பூட்டுமிடத்துப் பொன்னால் பூட்டினால் என்ன? இரும்பினால் பூட்டினால் என்ன? இரண்டும் அவனை அவன் விருப்பப்படி இயங்க ஒட்டாது தடுப்பனவேயாம். இதற்கு இக்காலத்தில் வேறோர் உவமை கூறலாம்.

இக்காலத்தில் குற்றவாளிகளைச் சிறைவைக்கும்பொழுது, சிலரை மேல் வகுப்புச் சிறையிலும், சிலரைக் கீழ் வகுப்புச் சிறையிலும் வைக்கின்றார்கள். எந்தச் சிறையில் வைப்பினும் சிறையேயன்றிச் சுதந்திரம் அன்று. அதுபோல, நல்வினையை 'மேல்வகுப்புச் சிறை' என்றும், தீவினையை, 'கீழ்வகுப்புச் சிறை' என்றும் கூறலாமேதவிர, சுதந்திர நிலை என்று கூற இயலாது. அதனால்தான் இரண்டையுமே 'வினை' என்னும் ஒரு பெயரால் கூறுகின்றனர் உயர்ந்தோர். எனவே, நல்வினை, தீவினை இரண்டும் நீங்குவதே வினை நீக்கமாகும்.

'நல்வினை, தீவினை இரண்டும் நீங்குவதே வினை நீக்கம்' என்றால், அதற்கு நல்வினையைச் செய்வது எங்ஙனம் வழியாய் அமையும்? 'பயன் கருதாது செய்யும் நல்வினை இருவினையும் நீக்கும்' என்றால், பயன் கருதாமல் யாரும், எந்தச் செயலையும் செய்ய முடியாது. அவ்வாறு செய்யின், அது பித்துக்கொண்டவர் செயலாய் முடியும். எவ்வாறு எனில், விழலுக்கு நீர் இறைப்பதுபோன்ற செயல்கள்தாம் பயன் கருதாது செய்யும் செயல்களாய் இருக்கமுடியும். அப்படிப்பட்ட செயலைப் பித்துக் கொண்டவர்களே செய்வார்கள். அவை பெரும்பயனாகிய வினை நீக்கத்தை எவ்வாறு தர முடியும்? எனவே, 'பயன் கருதாது செய்தல்' என்பதற்கு, 'தன்னலம் கருதாது செய்தல்' என்பதே பொருள் எனல் வேண்டும். தன்னலம் கருதிப் பிறர்க்குத் தீங்கு செய்தல்தான் தவறாகுமன்றிப் பிறர்க்கு நன்மை செய்து தானும் நலம் அடைவதில் தவறு என்னை? எவ்வாற்றாலேனும் தான் நலம் அடைவது தவறாகுமாயின், பிறரை நலம் அடையச் செய்வதும் தவறுதானே? ஏனெனில்

தனக்குத் தவறுகின்ற ஒன்று பிறர்க்குத் தவறில்லாததால் கூடாதன்றோ?

இதனால், 'பயன் கருதாது செய்தல்' என்பதற்கு, 'தன்னலம் கருதாது செய்தல்' என்பதே பொருள் என்றலும் கூடாமையால், அதற்கு, 'உலகப் பயன் கருதாது செய்தல்' எனப் பொருள் கூறல் வேண்டும். அங்ஙனமாயின், தனக்கேயன்றிப் பிறர்க்கு உலகப்பயன் உண்டாகுமாறு ஒன்று செய்வதும் தவறேயாம். ஆகவே அவையெல்லாம் வினையை மேலும் மேலும் வளர்ப்பனவாகுமேயன்றி வினை நீங்குதற்கு வழியாகமாட்டா. மற்றுத் தனக்காயினும் பிறர்க்காயினும் யாதொரு செயலையும், 'நான் செய்கின்றேன், செய்வேன்' என்னும் தன் முனைப்பின்றிச் செய்வதே வினை நீங்குதற்கு வழியாகும்.

ஒரு செயலை ஒருவன் செய்யும்பொழுது தன்னை அதற்குக் கருத்தாவாக நினையாதொழிந்தால், வேறு யாரைக் கருத்தாவாகக் கொள்வது? எல்லாவற்றையும் செய்தும், செய்வித்தும் நிற்கும் இறைவனையே அதற்குக் கருத்தாவாகக் கொள்ளுதல் வேண்டும் என்பது தெளிவு. இது வெறும் கொள்கைமட்டுமன்றி, உண்மையுந்தானே? ஏனெனில், உலகில் ஒவ்வொருவரும் செய்யும் செயலுக்கு அவரவரே கருத்தராய் இருப்பின் அவர் நினைத்தபடியே அச்செயல் முடிய வேண்டும். அவ்வாறின்றித் தான் ஒன்று கருதிச்செய்ய, அது வேறு வகையாகவும் முடிதலைப் பார்க்கின்றோம். ஆகவே, அச்செயலுக்கு உண்மைக் கருத்தா வேறொருவன் என்பதை நன்கு உணரலாம். அவனைக் கருத்தாவாக நினையாமல் அவரவரும் தம்மையே கருத்தாவாக நினைக்கின்ற குற்றத்தினால்தான் வினை என்பதே உண்டாகின்றது.

இவ்வுண்மையை அறியவொட்டாமல் மறைப்பது எது? ஆணவ மலமே. இஃது இருள்மயமானது. அதனால் 'இருள்' என்றே சொல்லப்படுகின்றது. எனவே, இந்த இருள்தான் வினைக்கே காரணம் என்பது புலனாகின்றது.

இருவினையைப் பற்றிக் கூறவந்த திருவள்ளுவர், மேற்காட்டிய குறளில், 'இருவினை' என்று வாளா கூறாது, "இருள்சேர் இருவினை" என்று கூறியிருப்பதைக் காண்கின்றோம். எனவே, இருவினைகள் ஆணவத்தினால்தான் உண்டாகின்றன என்று அவர் குறித்துள்ளமை தெளிவு.

இருள் நீங்குவது ஒளியினால்தான். அதுபோல, ஆணவ இருளை நீக்கும் ஒளி இறை உணர்வே. அதனால், இறையுண்மை நமக்கு அனுபவமாக விளங்காவிடினும் அனுபவத்தைப் பெற்றோரது அருள்மொழியின்வழி அவனை நாம் உணர்தல் வேண்டும். அவ்வுணர்வைத் தரும் செயல்கள், அவனை மனத்தால் நினைத்தலும், வாயால் வாழ்த்தலும் உடலால் பணி செய்தலும் ஆகிய இவையேயாம். ஆகவே, வினை நீங்குவதற்கு இவற்றைத் தவிர வேறு வழி இல்லை என்பது தெளிவு. இறைவனை நினைத்தல், வாழ்த்தல், வணங்கல் என்னும் மூன்றனுள், மேற்காட்டிய குறளில், 'இறைவனை வாழ்த்தல்' என்பதைத் திருவள்ளுவர் எடுத்துக்கூறினர்.

நினைத்தல் புறநிகழ்ச்சி சிறிதுமின்றி அகத்தோடு ஒழிதலாலும், உடலாற் பணிசெய்தல் எல்லார்க்கும் கூடாமையாலும் இடைநிற்கும் வாயால் வாழ்த்துதல் யாவர்க்கும் உரியதாகின்றது. அதனால், அதையே மேற்காட்டிய திருக்குறளில் கூறியுள்ளார். சமயாசாரியர் நால்வரும், பிறருமாகிய அருளாளர் பலரும், தமக்கும், பிறர்க்கும் நன்கு பயன்படும் வகையில் இறைவாழ்த்துப் பாடல்களை அளவிறந்தனவாக அருளிச் செய்திருத்தல் இங்கு நன்கு நினைக்கத் தக்கது.

இறைவனை வாழ்த்தும் வாழ்த்துப் பாடல்கட்கு அவற்றின் பொருளாகிய இறைவன் பெருமைகள் இன்றியமையாதன. அவற்றைத் தருவன புராணங்கள். புராணங்களில் சொல்லப் பட்ட வரலாறுகள், இறைவன் தன் அன்பர் பலர்க்கு அவ்வப் பொழுது அருள்புரிந்த செயல்களும், அவனது இயல்புகளை எளிய வகையில் சுவைபட விளக்கும் விளக்கங்களுமாய் அமைந்தவை. அதனால், தோத்திரத் திருப்பாடல்களை அருளிச் செய்த அருளாளர்கள் அவைகளைப் பல முறையும் எடுத்தோதி யருளினர்கள். அவை மக்களைப் புகழும் புகழ்ச்சியுரை போலப் புனைந்துரையாகாது. முற்றிலும் மெய்ம்மை நிறைந்தவை. அதனால், அவற்றை, 'பொருள்சேர் புகழ்'' என்றும், 'அவைகளை எப்பொழுதும் சொல்கின்றவர்களை இருவினையும் அடைய மாட்டா' என்றும் கூறினர் திருவள்ளுவர்.

'' காட்டி னுலும் அயர்த்திடக் காலனை
வீட்டி னுனுறை வேற்காடு

பாட்டி னற்பணிந் தேத்திட வல்லவர்
ஓட்டி னர்வினை ஒல்லையே "

" தோலி னுலுடை பேணவல் லான்சுடர்
வேலி னனுறை வேற்காடு
நூலி னற்பணிந் தேத்திட வல்லவர்
மாலி னர்வினை மாயுமே "

" விடையார்கொடி எந்தை வெள்ளைப்பிறை சூடும்
சடையான்கழல் ஏத்தச் சாராவினை தானே "

" .................... ஆப்பனூ ரானைப்
பரவும்மனம் உடையார் வினைபற்றறுப் பாரே "

" பகரும்மனம் உடையார் வினைபற்றறுப் பாரே "

" பாடும்மனம் உடையார் வினைபற்றறுப் பாரே "

" விடையானடி ஏத்த மேவாவினை தானே "

" சித்தம தொன்றிச் செய்கழல் உன்னிச் சிவன் என்று
நித்தலும் ஏத்தத் தொல்வினை நம்மேல் நில்லாவே "

" அரும்பு சேர்மலர்க் கொன்றையி னனடி அன்பொடு
விரும்பி ஏத்தவல் லார்வினை யாயின வீடுமே "

" ஊனில் வெண்டலைக் கையுடை யானுயர் பாதமே
ஞான மாகநின் றேத்தவல் லார்வினை நாசமே "

(சம்பந்தர்)

" நின்றியூர் - உரையி னல்தொழு வார்வினை ஓயுமே "

" குரக்குக்கா - நக்க னைநவில் வார்வினை நாசமே "

" நாகைக்கா ரோணனைச் - சொல்ல வேவினை யானவை
[சோருமே "

" பார்த்துப் பாசம் பிடித்தெழு தாதுவர்
கூர்த்த வேலாற் குமைப்பதன் முன்னமே
ஆர்த்த கங்கை அடக்கும்வாட் போக்கியார்
கீர்த்தி மைகள் கிளர்ந்துரை மின்களே "

" அல்ல வாகஐம் பூதங்கள் ஆட்டினும்
வல்ல வாறு சிவாய நம என்று
நல்லம் மேவிய நாதன் அடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே "

" மதிதருவன் நெஞ்சமே உஞ்சு போக
வழியாவ திதுகண்டாய் வானோர்க் கெல்லாம்
அதிபதியே! ஆரமுதே! ஆதி என்றும்,
அம்மானே! ஆரூர்எம் ஐயா என்றும்,
துதிசெய்து துன்றுமலர் கொண்டு தூவிச்
சூழும வலஞ்செய்து தொண்டு பாடிக்
கதிர்மதிசேர் சென்னியனே! கால காலா!
கற்பகமே என்றென்றே கதறு நில்லே "

" பாசத்தைப் பற்றறுக்க லாகும் நெஞ்சே,
பரஞ்சோதி! பாண்டரங்கா பாவ நாசா!
தேசத் தொளிவிளக்கே! தேவ தேவே!
திருவாரூர்த் திருமூலட் டானா என்றும்
நேசத்தை நீபெருக்கி நேர்நின் றுள்கி
நித்தலுஞ் சென் றடிமேல் வீழ்ந்து நின்று
ஏசற்று நின்றிமையோர் ஏறே என்றும்
எம்பெருமான் என்றென்றே ஏத்தா நில்லே "

(அப்பர்)

" பொன்செய் செஞ்சடைப் புண்ணி யன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்,
நெஞ்சில் நோயறுத் துஞ்சு போவதற்
கியாதும் ஐயுற வில்லையே "

" ............பூம்புக லூரைப்பாடுமின் புலவீர்காள்,
அள்ளற் பட்டழுந் தாது போவதற்
கியாதும் ஐயுற வில்லையே "

" பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில் - ஒற்றியூரே "

" மண்ணுல கிற்பிறந்து நும்மை
வாழ்த்தும் வழிய டியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்ட
னேன்இன்று கண்டொழிந் தேன் " (சுந்தரர்)

" சூழ்த்தமது கரமுரலும் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும்உன்னைப்
[பரவுவனே "

" பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டும்நான் போற்றி " (மாணிக்கவாசகர்)

" ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ "

" அவன்மருவும் - திருவாரூர் பாடிநாம் தெள்ளேணம்
[கொட்டாமோ "

" தனிப்பெரியோன் - சீர்பாடல் பாடிநாம் தெள்ளேணம்
[கொட்டாமோ "

" அம்பலத்தே ஆடுகின்ற - புனையாளன் சீர்பாடிப்
[பூவல்லி கொய்யாமோ "

" வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்
திணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ "

என்றாற்போலத் திருமுறைகள் பலவற்றிலும் இவ்வாறே பரக்கக் கூறப்படுகின்றன. அதனால் அறநெறியிலும், அருள் நெறியிலும் இறைவனை மனத்தால் நினைந்து, உடலாற் பணி செய்தலுடன், வாயால் அன்பு பெருக புகழைப் பரக்கச்சொல்லி வாழ்த்துதலே வினைநீக்கத்திற்கு வழியாகக் கூறப்படுதலை உணர்ந்து யாவரும் அவ்வழியே வினைநீங்கி உய்வார்களாக.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 28, இதழ் 3, பக்கம் 128 இன் தொடர்ச்சி)

## ஞானம்

மாணாக்கன்: 'ஞானம்' என்பதற்கு, 'அறிவு' என்பது தானே பொருள்? அறிவின்றி யாதும் செய்ய இயலாதன்றோ? அதனால், சரியை முதலிய தவங்களும் ஞானமேயன்றோ? அவ்வாறிருக்க, 'ஞானம்' என்று தனியே சொல்லப்படுவது எது?

ஆசிரியர்: 'அறிதல்' என்னும் அளவில், சரியை முதலிய தவங்களும் ஞானமே என்றாலும் தத்துவ ஆராய்ச்சிவழியாக இறைவனை அறியும் அறிவே, 'ஞானம்' என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றது. இஃது, அறிவு யாவும் ஞானமேயாயினும், மெய்ப்பொருளாகிய இறைவனை அறியும் அறிவே "ஞானம்' எனப்படுதல் போன்றது.

'சரியை முதலிய மூன்றும் ஞானத்தின் வளர்ச்சி நிலைகளே' என்பதைத் தாயுமானவர்.

> "விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
> அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே"

என்று கூறுதல் காணலாம்.

இறைவனை அறநூல்கள், 'மெய்ப்பொருள்' என்று கூறும். அதனால், அறநூல்களில் ஞானம், 'மெய்யுணர்வு' என்று கூறப்படும். வைதிகர்கள் மெய்ப்பொருளை 'பிரம்மம்' என்று கூறுவதால், மெய்யுணர்வை அவர்கள், 'பிரம்மஞானம்' என்பார்கள். இறைவனைச் சைவ சமயம், 'சிவம்' என்று கூறுவதாகலின், இதன்கண் இறையுணர்வு, 'சிவஞானம்' எனப்படுகின்றது. இவையெல்லாம், தத்துவ ஆராய்ச்சிவழியாக மெய்ப்பொருளை உணரும் உணர்வையே குறிப்பனவாம்.

மாணக்கன் : 'தத்துவ ஆராய்ச்சி' என்பது யாது?

ஆசிரியர் : 'தத்துவம்' என்பதற்கு 'மெய்ம்மை' அல்லது 'உண்மை' என்பது பொருள். எனவே, 'தத்துவ ஆராய்ச்சி' என்பது பொருள்களின் உண்மைநிலையை அளவை முறையால் ஆய்ந்துணர்தலாகும். இதனல், ஒவ்வொரு சமயமும் தன்தன் கொள்கையே உண்மை 'என்பதைத் தத்துவ நூல்வழியாக விளக்குகின்றது. சைவசமயம் தனது கொள்கையை அவ்வாறு விளக்கும் பகுதியே சைவாகமங்களில், 'ஞான பாதம்' எனப் படுவது. அந்த ஞானபாதப் பொருளை அடிநிலையாகக் கொண்டு, அப்பொருள் அனுபவமாகக் கிடைத்தற்குச் செய்ய வேண்டுவன வற்றைக் கூறுவனவே ஏனைய சரியை, கிரியை, யோக பாதங்கள். இவை மூன்றும் பொதுவாக, 'கிரியா பாதம்' என்ற ஒரு பெயரி ஞலும் கூறப்படும். 'இப்பகுதிகள் யாவும் ஞானத்தையே குறிக்கோளாக உடையவை' என்பதை. உமாபதி சிவாசாரியார்,

> "கிரியைஎன மருவும்அவை யாவும் ஞானம்
> கிடைத்தற்கு நிமித்தம்"

என இனிது விளக்கினர். வேதங்களும், 'கருமகாண்டம், ஞான காண்டம்' என இரு பிரிவுகளாய் இருத்தலும், கருமகாண்டத் தின்வழிச் செய்யும் கருமங்கட்கு உண்மைப் பயன், ஞான காண்டப் பொருளை அனுபவமாகப் பெறுதலே என்றலும் உணரற்பாலன.

பிற மதங்களின் தத்துவக் கொள்கைகள் பலவற்றிலோ அல்லது சிலவற்றிலோ பொருத்த முடையன ஆகாமையும், சைவ சித்தாந்தமாகிய தத்துவக் கொள்கைகளே முற்றிலும் பொருந்துவன ஆதலையுமே முதற்ருெட்டு இதுகாறும் விளக்கி வருகின்ருேம். இங்ஙனம் விளக்கப்பட்ட உண்மைகளை உண்மை யென்று உணர்வதே ஞானம் என்று உணர்வாயாக.

## ஞானம் வரும் வழி

மாணக்கன் ; அடிகள் அருளிச்செய்தவாறு இச் சைவ சித்தாந்த உண்மைகள், வடமொழியிலும், தென்மொழியிலும் பாட்டும், உரையுமாய் அமைந்த எண்ணிறந்த நூல்களில் இனிது விளக்கப்பட்டிருக்கவும், இவற்றைப் பலர் உண்மை என்று உணராததற்குக் காரணம் என்னை ?

ஆசிரியர்: காரணம் பரிபாகம் இன்மையன்றி வேறு யாதுளது? 'பரிபாகம்' என்பது ஆணவ மலம் தனது சத்தி கெட்டு நீங்கும் நிலையை அடைதல். அது வந்த காலத்தில் சத்திநிபாதமும், அது வழியாகச் சரியை முதலிய தவங்களும் நிகழும். அத் தவமுதிர்ச்சியால் இருவினையொப்பு உளதாகி உலக மயக்கம் நீங்கச் சிவஞானம் கைகூடும்.

## குருவருள்

மாணுக்கன்: 'மலபரிபாகம், சத்திநிபாதம், இருவினையொப்பு' என்பன தாமே இயற்கையாய் நிகழ்தல்போலத் தவமும், ஞானமும் தாமே ஒருவர்க்கு நிகழுமோ?

ஆசிரியர்: நிகழா. குருவருளாலேதான் தவமும், ஞானமும் நிகழும். ஏனெனில், மலபரிபாகமும், சத்திநிபாதமும் வந்த காலத்தில்தவத்தைச் செய்யத்தக்க நிலையும், ஞானத்தை உணரத் தக்க நிலையும் வாய்க்குமே யன்றித் தவமும், ஞானமும் தாமே வந்துவிட மாட்டா. இவற்றிற்குச் சில உவமைகள் கூறலாம். நோயாளிக்கு நோய் உள்ளபொழுது பசியில்லாமையால் உணவை உட்கொள்ளும் தன்மையில்லா திருக்கிறது. மருந்துகளால் நோய் நீங்கியபின்பு பசி உண்டாகி, உணவை ஒருவர் ஆக்கி அளித்தபிறகு அதனை உண்டே பசி தணியவேண்டும்.

இன்னும் இளங் குழந்தைகட்கு அக்குழவிப்பருவம் காரணமாகக் கல்வி கற்கும் நிலை இல்லை. குழவிப் பருவத்தைக் கடந்தால் கல்வி கற்கும் நிலை வாய்க்கின்றதே யன்றிக் கல்வியே அப்பருவத்தால் வந்துவிடாது. ஆசிரியர் ஒருவர் கற்பிக்கத்தான் கல்வி வரவேண்டும்.

பிறவியிலே கண்ணில்லாத ஒருவனுக்கு மணி மந்திர ஔடதங்களால் கண் கொடுக்கப்படுமாயின், அவன் பொருள்களைக் காணும் நிலையை அடைவானேயன்றிப் பொருள்களையே 'இஃது இன்னது; இஃது இன்னது' என்று உணர்ந்து கொள்ளமாட்டான். கண்ணுடையவனுய்ப் பொருள்களை அறிந்துள்ள ஒருவனே அவனுக்கு 'இஃது இன்னது' என்று அறிவிக்க வேண்டும். இவைபோலவே, ஆணவமலம் பரிபாகமாகச் சத்திநிபாதம் வருமாயின், தவத்தைச் செய்யும் நிலைமையும், ஞானத்தை உணரும் நிலைமையும் வாய்க்குமேயன்றித்

தவமும், ஞானமும் கிடைத்துவிடமாட்டா. குருவினாலேயே அவை கிடைத்தல் வேண்டும்.

மாணாக்கன்: தவம் புரியும் நிலையும், ஞானத்தை உணரும் நிலையும் நிகழுங் காலம் வேறுவேறாதலின், அவற்றை உணர்த்தும் இருமாரும் வேறுவேறாவரோ? ஒருவரேயாவரோ?

ஆசிரியர்: தவம், பொதுவாக, 'கிரியை' என்றும் சொல்லப்படும் என்று மேலே கூறினோமாதலால், சரியை முதலிய மூன்றையும் தருவோர் 'கிரியா குரு' என்றும், ஞானத்தை உணர்த்துவோர், 'ஞான குரு' என்றும் சொல்லப்படுவார்கள். மேன்மேல் நிலையில் உள்ளவர் கீழ்க்கீழ் நிலையைப் பிறருக்குத் தரவல்லவராவர். கீழ்க்கீழ் நிலையில் உள்ளவர் மேன்மேல் நிலையைத் தரவல்லவராகார். அதனால், ஞான குரு, 'ஞானம், யோகம், கிரியை, சரியை' என்ற நான்கினையும் தரவல்லவர். யோக குரு, 'யோகம், கிரியை, சரியை' என்னும் மூன்றைத் தரவல்லவராவர். கிரியா குரு, கிரியை, சரியை என்னும் இரண்டைத் தருவார். சரியைக் குரு சரியை ஒன்றை மட்டுமே தர உரியவர் என்று இவ்வாறு குருமாரது தாரதம்மியங்களைக் கண்டு கொள்க.

" ஞானயோ கக்கிரியா சரியை நாலும்
நாலினுக்கும் உரியன்;
ஊனமிலா யோகமுதல் மூன்றினுக்கும் உரியன்
யோகி; கிரி யாவான்தான் ஓண்கிரியையாதி
ஆனஇரண் டினுக்குரியன்; சரியையினில் நின்றோன்;
அச்சரியைக் கேஉரியன்; ஆதலினால் யார்க்கும்
ஈனமிலா ஞானகுருவே குருவும் இவனே
ஈசன் இவன் குன்என்றும் இறைஞ்சி ஏத்தே"

என்னும் சிவஞான சித்திச் செய்யுள் இங்கு அறியற்பாலது.

(தொடரும்)

# தஞ்சை மாநகரில் பிற்காலச் சோழ மன்னர்களுக்கு மாளிகை இருந்த இடம்

கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான்,

திரு. வை. சுந்தரேச வாண்டையார்

'தார்வேந்தனும் சோழனே' என்று சிறப்பிக்கப்பெற்ற சோழ மன்னர்களுள் பரகேசரி விசயாலயன் (கி. பி. 846-880) என்பவனே பிற்காலச் சோழர்களுள் முதல்வனாவன். இவன் முத்தரையனிடமிருந்து தஞ்சையைப் பிடித்துக்கொண்டான்.* அதுமுதல் இச்சோழமன்னர் உறையூரைவிட்டு, இத் தஞ்சையையே தலைநகராகக் கொண்டனர். இத்தஞ்சைமா நகரமும் இந்த விசயாலயன் பரம்பரையில் பத்தாவது சோழனாகிய முதலாம் இராசராசசோழன் காலம் முடிய (கி. பி. 985 - 1014) இச்சோழ மரபினர்க்குத் தலைநகரமாய் விளங்கியிருந்தது. இங்ஙனம் விளங்கியிருந்த காலையில் இச் சோழ மன்னர்களுக்கு மாளிகை, தஞ்சையில் எவ்விடத்தி லிருந்தது என்பதை, லெய்டன் நகரத்துப் பெரிய செப்பேடுகள் (The large Leydon plates) உணர்த்துகின்றன. அதில் வேண்டிய அளவு கீழே குறிப்பிடுகின்றேன்.

வரி (Plate 1 - a)

1. சுவஸ்திஸ்ரீ. கோனேரின்மை கொண்டான் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு -

2. ப் பட்டணக் கூற்றத்து நாட்டார்க்கும் பிரமதேயக் கிழவர்க்கும் தேவ் தானப் பள்ளி

---

* Tiruvalangadu plates of Rajendra chola I verse 45. மேலும் செந்தலையில் உள்ள எட்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டு பெரும்பிடுகு முத்தரையன், தன்னைத் தஞ்சைக்கு அரசன் என்று கூறிக்கொள்வதைக் குறிப்பிடுகின்றது.

வரி

( Plate 1 - a )

3. ச் சந்தக் கணி முற்றூட்டு வெட்டப் பெற்ற ஊர்களி லார்க்கும் நகரங்களிலார்க்கும்

4. நமக்கு யாண்டு இருபத் தொன்ருவது நாள் தொண் ணூற்றிரண்டிநால்

5. தஞ்சாவூர்ப் புறம்படி மாளிகை ராஜாசிரியநில் தெற்கில் மண்டபத்

6. து நாம் இருக்கக் கிடாரத்தரையன் சூளாமணிப் பன்மன் க்ஷத்திரிய சிகா

7. மணி வளநாட்டுப் பட்டநக் கூற்றத்து நாகப்பட்டனத்து எடுப்பிக் கின்ற சூளா

8. மணி பன்ம விகாரத்துப் பள்ளிக்கு வெண்டும் நிவந்தத் திக்கு க்ஷத்திரிய சிகாமணி வ

9. ள நாட்டுப் பட்டநக் கூற்றத்து ஆனைமங்கலம் பள்ளிச் சந்தம் இரங்கலுள்பட அள

10. ந்தபடி நீங்கல் நீக்கி நிலன் தொண்ணூற்றேழேயிரண்டு மா முக்காணி யரைக்கா

( Plate 1 - b )

11. ணி முந்திரிகைக் கீழ் மூன்று மா முக்காணி முந்திரிகைக் கீழ் அரையே இரண்

12. டுமாவினால் இறைகட்டின காணிக் கடன் நெல்லு எண் ணாயிரத்துத் தொள்ளாயி

13. ரத்து நாற்பத்து முக்கலனே இருதூணிக் குறுணி ஒரு நாழியும் கடாரத்தரையன்

14. க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து நாகப்பட்டனத் தெடுப்பி

15. க்கின்ற சூளாமணி பன்மவிகாரத்துப் பள்ளிக்கு இறப் பதாக யாண்டு இருபத்

வரி ( Plate 1 - b)

16. தொன்றுவதுமுதல் பள்ளிச் சந்த இறையிலியாக வரியி லிட்டுக் குடுக்க

17. வென்று நாம் சொல்ல" ........... .......

எனத்தொடர்கின்றது இச்செப்பேடுகள்.

இச்செப்பேட்டில் குறிக்கப்பெற்ற முதலாம் இராசராசன் காலத்தில் தஞ்சைமாநகரம் உள்ளாலை (old limit) புறம்படி (outside the town) என இரு கூறுகப் பிரிக்கப்பட்டிருந்தது. இக்காலம் Town extension என்பதே புறம்படியாகும். (Town extension) என்னும் ஆங்கிலத்தொடர்க்குப் புறம்படி என்ற தமிழ்த்தொடர் இச்செப்பேட்டில் காண்பது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

எனவே தஞ்சாவூர்ப் புறம்படியில்தான் இராசராசனுக்கு மாளிகை இருந்தது. அந்த மாளிகையின் பெயர் இராசாசரியன் என்பதாகும். இராசாசரியன் என்பது முதலாம் இராசராச சோழனுடைய விருதுப்பெயர்களுள் ஒன்றுகும். இந்தப்புறம் படியில், மடைப்பள்ளித்தெரு, ராஜ வித்யாதரப் பெருந்தெரு, வீரசோழப் பெருந்தெரு, வில்லிகள் தெரு, ஆனை ஆட்கள் தெரு ஜயங்கொண்டசோழப் பெருந்தெரு, சூரசிகாமணிப் பெருந் தெரு, பன்மையார் தெரு, ஆனைக்கடுவார் தெரு முதலான பல தெருக்களும்; அபிமானபூஷணத்தெரிந்த வேளம், உய்யக் கொண்டார் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளம், ராஜராஜத் தெரிந்த பாண்டித் திருமஞ்சனத்தார் வேளம் முதலான பல வேளங்களும்; திரிபுவன மாதேவிப் பேரங்காடி, கொங்கவாளார் அங்காடி, ராஜராஜபிரம மகாராஜன் அங்காடி, முதலான கடைத்தெருக்களும்; இருந்தன. உள்ளாலையில் (old limit) சாலியத்தெரு, பாண்டி வேளம் முதலான பலவும் இருந்தன. இவைகள் தஞ்சை இராசராசேச்சரக் கல்வெட்டுக்களினுல் அறியக் கிடக்கின்றன. இவைகளை எல்லாம் பின்னர்த் தொகுத்து எழுத இருக்கின்றேறைதலின் சிலவற்றை மட்டும் ஈண்டுக் குறித்துள்ளேன். இவைகளுள் வேளம் என்பதுசோழ மன்னர்களால் சிறை பிடிக்கப்பட்ட உயர்குலத்துப் பெண்கள் அடிமையாக வாழும்படி அமைத்த பாதுகாவலான இடம்.

எனவே தஞ்சாவூர்ப் புறம்படியில் இராசராசனுக்கு மாளிகை இருந்தமையால், அவனுடைய முன்னோர்களுக்கும் மாளிகை அங்கு இருந்திருக்க வேண்டும். அதனை முதலாம் இராசராசன் விரிவுபடுத்தி அதன் ஒரு பகுதிக்குத் தன் பெயரை இட்டிருக்கவேண்டும் என்று உய்த்துணரக் கிடக்கின்றது. உள்ளாலைப் பகுதியில் மாளிகையைப் பற்றிய குறிப்பே இடையாது.

குறிப்பு:- இச்செப்பேட்டுப் பகுதியால் திருமங்கை மன்னர் காலமும் தெற்றென விளங்குகின்றது. திருமங்கை மன்னன் இச்செப்பேட்டில் குறிப்பிடப்பெற்ற சூளாமணி பன்ம விகாரத்துப் பள்ளியில் இருந்த தங்கப்படிமத்தைக் களவு செய்து கொண்டுபோய் திருவரங்கத்துக் கோயிலுக்குத் திருப்பணிக்குப் பயன்படுத்தினான் என்னும் வரலாற்றுப் பகுதியால் அம்மங்கை மன்னன் காலம் பதினொன்றும் நூற்றாண்டின் முற்பகுதி என்பது தெற்றெனவிளங்குகின்றது. என்னை ? "கிடாரத்தரையன் நாகப்பட்டனத்து எடுப்பிக்கின்ற சூளாமணி பன்ம விகாரத்துப் பள்ளிக்கு" — என நிகழ் காலத்தில் இருப்தாலும் அக்காலம் முதலாம் இராசராசசோழன் அரியணை ஏறிய இருபத்தொன்றும் ஆண்டு ஆதலாலும் அதாவது கி. பி 985 + 21 = 1006 கி. பி. பதினொன்றும் நூற்றாண்டின் முற்பகுதி.

---

## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 3 – 00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்.

உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை B. A , B L., அவர்கள்

குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்.

# ❊ சங்க நூல்களில் சிவன் ❊

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.

## தொன்மைச் சிறப்பினை அறிய :

சங்க நூல்கள் என்று குறிக்கப்பெறுபவை பாட்டும் தொகையும் என்று இரண்டாகக் கூறப்பெறும். இவற்றுள் சிவபிரானைப் பற்றிய பல அரும்பொருள்கள் காணப்பெறுகின்றன. இவற்றைத் தொகுத்துக் காணுதல், சிவவழிபாட்டின் தொன்மைச் சிறப்பினை அறிதற்கும், சங்க நூல்களிற் சிவபிரானைப்பற்றிய குறிப்புக்களே இல்லை என்று தவறாக எண்ணுதலை நீக்குதற்கும் பயன்படும்.

சிவபிரான் திருவடிக்கீழிருந்து உலகங்கள் முகிழ்த்தன என்னும் பேருண்மையையும், அப்பெருங் கடவுளது பெருங் கருணையையும் சங்கநூல்கள்தாம் எத்துணைத் தெளிவாக உரைத்துள்ளன!

## இரட்டைக் காப்பியங்களில் :

சங்ககாலத்தை யடுத்து வந்த இரட்டைக்காப்பியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலைகளில் சிவபிரானைப்பற்றிய பல குறிப்புக்கள் காணப் பெறுதல் கண்கூடு.

'நுதல்விழி நாட்டத் திறையோன்', 'பிறவா யாக்கைப் பெரியோன்', 'ஆனேறுயர்த்தோன்', என்ற தொடர்களால், நெற்றிக் கண் உடையவனும், ஆதி இல்லாத முதல்வனும், விடைக்கொடி உயர்த்தியவனும் ஆகிய சிவபிரானை இளங்கோ வடிகள் குறித்துள்ளார். மணிமேகலையில் அட்டமூர்த்தியாக விளங்கும் சிவபிரானைப் புகழ்ந்தும், சிவநெறியைச் சுருக்கி உரைத்தும் கூறியுள்ள அரிய பகுதி தமிழ் உலகினரால் பெரிதும் சிறந்தெடுத்துப் பேசப் பெறுவதும் இங்குக் குறிக்கத்தக்கது.

## புறநானூற்றுப் புலவர்கள் :

'நல்லனவாகிய பொருள்களை உலகிற்கு ஆய்ந்து அருள் புரிந்தவனும், நீண்டு நிமிர்ந்த சடை உடையவனும், உலகிற்

கெல்லாம் முதல்வனுமாக முதிர்ந்த சிவபிரான் ' என்று புகழ்வர் கௌணியன் விண்ணந்தாயனர்.[1]

' குவிந்த கொத்துக்களை உடைய பொலிவற்ற இலைகளை உடைய எருக்கமலராயினும் அன்போடு கூடியவற்றைச் சிவபிரானாகிய கடவுள் ஏற்றுக்கொள்ளுவதுபோல, அறிவற்றவரும் கொணரும் அன்புகனிந்த பாடல்களை ஏற்றுப் பரிசில் வழங்குவான் பாரி ' என்று புகழ்வார் கபிலர்.[2]

' பால்போன்ற பிறை பொலிந்த சென்னியையும், நீலமணி மிடற்றையும் உடைய ஒப்பற்ற இறைவன் போல நீயும் நிலைபெறுக ' என்று நெல்லிக்கனி தந்த அதிகமானை ஔவையார் பாராட்டும் பாடல் புறநானூற்றில் பொலிகின்றது.[3]

## சேவடிக்கீழ் உலகம் :

' நீலமேனியையுடைய வாலிழையவளாகிய உமாதேவியை ஒருபாகத்திற்கொண்ட ஒப்பற்ற சிவபிரானது இரு திருவடி நிழற்கீழ் மூவகை உலகும் முறையே முகிழ்த்தன ' என்று ஐங்குறு நூற்று முகப்பில் கவியிசைப்பர் பெருந்தேவனர்.[4]

## சிவபிரான் நஞ்சுண்ட கடவுள் :

பத்துப்பாட்டின் தொடக்கமே கடவுள் மணங் கமழ்வதாக உள்ளது. திருமுருகாற்றுப்படையிலும் குறிஞ்சிப் பாட்டிலும் முருகவழிபாட்டைக் காண்கிறோம். மதுரைக்காஞ்சியிலும்* மலைபடுகடாத்திலும் சிவபிரானைப்பற்றிய சில பல குறிப்புக்களைக் காணலாம்.

"தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
தொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தாளருவிப் பொருப்பிற் பொருந" (40 - 42)

என்ற வரிகளில் சிவபிரானைக் குறிக்கும் ' கடவுள் ' எனுஞ் சொல் இருத்தலை அறியலாம். ஆனல் நச்சினர்க்கினியர் இஃது அகத்தியரைக் குறிக்கும் என்பர்.

' காரியுண்டிக் கடவுள் ' என்ற பெயராற் சிவபிரானைக் குறித்துப் பாடுகிறது மலைபடுகடாம். காரி என்பது நஞ்சு.

[1] புறம் - 166. [2] புறம் - 106. [3] புறம் - 91. [4] ஐங்குறுநூறு-1.

அதனை உண்டு உலகைக் காத்தமையினால் காரியுண்டிக் கடவுள் என்று வழங்கப்படுகின்றான்.

> " நீரகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறல்
> பேரிசை நவிரம் மேஎயுறையும்
> காரியுண்டிக் கடவுளதியற்கையும்" ( 81 - 83 )

என்ற வரிகளிற் காண்க. நவிரமலையில் அமைந்த இச்சிவபிரான் திருக்கோவிலுக்கு நன்னன் பெரும்படையைக் காவலாக வைத்திருந்தான் என்றும், இப்பெருமானை வழிபடு கடவுளாகக் கொண்டு வாழ்ந்தான் என்றும் இம் மலைபடுகடாத்திலிருந்து அறியலாம்.

**சிவபிரான் ஊழிக்கூத்து :**

கலித்தொகை 'கற்றறிந்தோர் ஏத்தும் கலி' என்று போற்றப்படும் சிறப்புடைத் திருநூல். இதன்கண் முதற்பாட்டாக அமைந்துள்ள பாடல் சிவபிரானைப் பற்றிய நற்செய்திகள் பலவற்றை நவில்கின்றது. கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் ஆகிய முப்பெருங் கூத்துவகைகளைச் சிவபிரான் ஆடும் திருக்கோலத்தை இப் பாடலிற் காணலாம். அந்தணர்க்கு மறை பகர்ந்தவன் எனவும், கங்கையைச் சடையுட் கரந்தவன் எனவும், எட்டுத் திருக்கரங்களை உடையவன் எனவும் சிவபிரான் திருப்புகழ்களை இப்பாடல் விளக்குகின்றது. அன்றியும் பறை பல கொட்ட இறைவன் ஆடுங்காலத்து இறைவியாகிய அன்னை சீர், தூக்கு பாணி தருகின்ற செய்தியும் அதனுள் இயம்பப்படுகின்றது. இத்தகைய சீரிய பாடலை முகப்பினுட்கொண்ட இக் கலித்தொகையின் உள்ளும் சிவபிரானைப்பற்றிய பல குறிப்புகளைக் காண்கின்றோம்,[1]

**முப்புரம் எரித்த முதல்வன் :**

பாலைக்கலி தொடங்குகின்றது. பாலைநிலத்து வெம்மையைப் பாவன்மை தோன்றப் பாடத் தொடங்குகின்றார் பாலை பாடிய பெருங்கடுங்கோ. பிரமன் முதலாகிய தேவர்கள் வந்து குறையிரப்ப, அசுரர்களை அழித்து அமரர்களைக் காக்கும் பொருட்டுச் சிவபிரான் சினந்து நோக்கிய அளவில் அவ்வசுரரது முப்புரங்களும் அழிந்தன; தூளாயின. சூரியனின் வெம்மையால் மலைபிளந்து தூளாயினமைக்கு இச்செய்தி உவமை

---

[1] கலித்தொகை - பா. 1.

யாக உரைக்கப்பட்டுள்ளது.[2] இளவேனிற்காலத்துச் செக்கச் செவேரென்று பூத்த இலவமலர்கள் இப்பாலைபாடும் பாவலர்க்கு ஆனேற்றுக் கொடியோனது செம்மேனியினை நினைப்பூட்டுகின்றது.[3]

**அரக்கனை அடர்த்த அண்ணல் :**

கபிலர் குறிஞ்சிக்கலியில் மலையில் ஒரு காட்சியை வருணிக்கப்புகுகின்றார்: ஓர் யானை வேங்கை மரத்தைப் புலியெனக் கருதிக் குத்திற்று; அதனுள் ஆழ்ந்த தன் தந்தங்களை எடுக்க முடியாமல் பிளிறுகின்றது. அக்காட்சி இமயப்பெருமலையை வில்லாகக் கொண்ட சிவபிரான் உமையோடு திருக்கயிலையில் இருந்த போது, பத்துத் தலைகளை உடைய இராவணன் அம்மலையைப் பெயர்க்க முற்பட்டு இறைவன் அருளிச் செயலால் தன் கரங்களை எடுக்கவியலாமல் இடர்ப்பட்டுக் கூவிய காட்சியை நினைப்பூட்டுவதாகக் கபிலர் பாடும் பாடற் பகுதியை அறியாதார் யாரே ?[4]

**ஆலமர் செல்வன் :**

மருதனிள நாகனார் அழகுற ஒடித் தளர்நடையிட்டுச் சிறு தேரைக் கையான் இயக்கிவரும் சிறு புதல்வன் ஒருவனைக் குறிக்கும்போது 'ஆலின்கீழ் அமர்ந்த இறைவனுடைய அழகமைந்த முருகனைப்போல வந்தனன்' என்று கூறும் இனிய பகுதியை மருதக்கலியிற் காணலாம்.[5] அதுபோலவே 'ஆலமர் செல்வன் அணிசால் மகன் விழா'[6] என்னுமிடத்தும் காணலாம்.

**அறம்வளர்த்த நாயனார் :**

இறைவன் பொய் கூறுது மெய்யே விளக்கும் மெய்ப்பொருள் என்பதனை, 'ஐயம் தீர்ந்து யார்கண்ணும் அருந்தவ முதல்வன்போல் பொய்கூறுய் என நின்னைப் புகழ்வது கெடாதோ தான்' என்று கூறும் இடத்தில் விளக்கம் காணலாம். நச்சினார்க்கினியர் இப்பகுதிக்கு உரைவிரிக்குங்கால் 'அருந்தவ முதல்வன்' என்பதற்கு அறம் வளர்த்த நாயனார் என உரை எழுதுதல் அறிந்து இன்புறத்தக்கது.[7]

---

[2] பாலைக்கலி - 1. [3] பாலைக்கலி 26. [4] பசலைக்கலி - 2.
[5] மருதக்கலி - 16. [6] மருதக்கலி - 18. [7] மருதக்கலி - 35.

### ஏறுகளும் இறைவனும் :

எருதுகளைத் தம்மிற் கலந்து தொழுவத்திலே புகவிட்ட நிலையில் அவற்றை ஒவ்வொன்ருகக் கூறிவரும்போது சோழன் நல்லுருத்திரனர் கரிய சருச்சரையை யுடைய கழுத்தினையும், ஏந்திய குட்டேற்றத்தினையும் உடைய குரால் நிறத்தினை உடைய ஏற்றினைப் பெரும் பெயர்க் கணிச்சியோனும் திருநீலகண்டனுமாகிய சிவபிரானுக்கு உவமை யாக்குதல் முல்லைக்கலியில் கண்டு இன்புறத்தக்க பகுதியாகும்.[1]

### அந்தம் ஆதி அரனே :

பல உலகங்களில் உயிர்கள் எல்லாம் பழைய ஊழிக்காலத்திலே பிறந்திறந்து தடுமாறித் திரியும்படி அயனுய் நின்று படைத்த முதல்வனும் இறையவன் அரனுக நின்று அவ்வுயிரெல்லாம் தன்னிடத்தே வந்து தொகுதலை விரும்பிஊழி முடிந்தபிறகு தன்னிடத்து மீட்டும் ஒடுக்கிக்கொள்வதைப் போல, ஞாயிறு தன் கதிர்களை மீட்டும் தன்னிடத்தே ஒடுக்கிக் கொள்ளும் அந்திநேரம் என்று நெய்தற் கலியிலே ஆசிரியர் நல்லந்துவனர் பாடும் அருமையான பாடற் பகுதியின் மாட்சி பயிலுந்தோறும் இனிது புலனுகும்.[2] சிவஞானபோதம் முதற் சூத்திரக் கருத்து இக்கலித்தொகைப் பகுதியிலேயே குறிப்பாகவெளிப்பட்டிருத்தல் காண்க.

இச் சிந்தனை சங்க நூல்களிலேயே தோன்றியிருக்குமாயின், சில வழிபாடும் அதன் மாட்சிகளும் குறித்த தொன்மையும் தன்மையும் நன்கு விளங்குமல்லவா ?

### ஆதிரையான் பெருமான் :

நெய்தற்கலியோடு கலித்தொகை நிறைவு பெறுகிறது. நெய்தற்கலியைப் பாடியவர் நல்லந்துவனர் என்பர். நல்லந்துவனர் கலித்தொகை முற்றும் சிவமணம் கமழும்படிச் செய்துள்ளார் என்றே கூறலாம். சிவபிரானைப்பற்றிய வாழ்த்துடன் தொடங்கும் கலித்தொகை முடியும்போதும் சிவபிரான் திருப்புகழோடுதான் முடிகிறது; பொருள்வயிற் பிரிந்த தலைவனை

---

[1] முல்லைக்கலி - 4, 5, [2] நெய்தற்கலி - 12 ; 'அரியாகிக் காப்பான் அயனய்ப் படைப்பான், அரனுய்அழிப்பவனுந் தானே' - என்ற திருக்கயிலாய ஞான உலாவுடன் ஒப்பிடுக.

நினைந்து ஆற்றுமை கொண்ட ஒரு தலைவியை அவள் தோழி ஆற்றுவிக்கிறாள். பாலையின் வெம்மைக்குச் சிவபிரான் முப்புரத்தை எரிசெய்த அன்று பிறந்த வெம்மையை உவமை கூறுகிறாள் ;

" அயந்திகழ் நறுங்கொன்றை அலங்கலந் தெரியலான்
இயங்கு எயில் எயப்பிறந்த எரிபோல் எவ்வாயும்
கனைகதிர் தெறுதலின். "

இறைவனை, "அரும்பெறல் ஆதிரையான்" எனக் கூறுதலை அறிதல் வேண்டும். சிவபிரானுக்குரிய திருநட்சத்திரம் ஆதிரை என்பதை இங்கே அறிந்து இன்புறலாம்.

## ஐம்படைத்தாலியில் ஆனேறு :

'குழந்தைகளுக்கு ஐம்படைத்தாலி' என்ற அணியினை அணிவது பழையகால வழக்கம். அஃது இருவகையாக அணியப்பட்டு வந்திருக்கிறது. கலித்தொகையிலே மருதனிள நாகனார் ஒரு வகையினை உரைக்கின்றார்.[1] அதனைக்காணும்போது சிவபிரானை மக்கள் எப்படி ஏத்திப்பரவி நினைவுகொண்டிருந்தனர் என்பது விளங்கும். வாள், மழு, ஆனேற்றுப்பூண், முத்துவடம், மாலை ஆகியவை அணிந்து தோன்றும் தன் சிறுமகனைப் பாராட்டிப் பால் ஊட்டுகின்றாள் தலைவி. உன் தந்தைக்காக இதனை உண்பாயாக என்றும், உன் தாயர்க்காக இதனை உண்பாயாக என்றும் பல பேச்சுக்களை விளையாட்டாகக்கூறித் தலைவி உண்பிப்பதாகப் புலவர் கூறுகின்றார். அச்சிறு புதல்வன் அணிவகைகளைக் குறிக்குங்காலத்தேயே இவ்வணிவகையினைக் காண்கின்றோம்.

" பூண்டவை எறியா வாளும் எற்று மழுவும்
செறியக் கட்டி ஈரிடைத் தாழ்ந்த
பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய ஆனேற் றவிர்பூண் "

எனவரும் வரிகளில் இக்கருத்தினைக் கண்டு இன்புறலாம்.

## ' ஓரம்பே முப்புரம் '

நான்முகனாகிய பாகன் வேதமாகிய குதிரைகளை ஓட்டுகிறான்; அப்பூமியாகிய தேரை யேறி வாசுகி நாணாக இமயம் வில்லாக திரிபுரங்கள் ஓரம்பால் வேவுமாறு எய்தவன் சிவபிரான் ; அவி

[1] மருதக்கலி 20.

உணவு ஏற்கும் அருந்திறலினன்; அச்சிவபிரான் உமையொடு கூடிக் களித்தனன் என்று பரிபாடல் பகர்கின்றது;[1]

"ஆதியந்தணன் அறிந்துபரி கொளுவ
வேதமாபூண் வையத்தேர் ஊர்ந்து
நாக நாண மலைவில்லாக
மூவகை, ஆரெயில் ஓரழலம்பின்முனிய
மாதிரம் அழல எய்து அமரர்வேள்விப்
பாகம் உண்ட பைங்கட் பார்ப்பான்
உமையொடு புணர்ந்த காமர்வதுவையுள்"

என்று இச்செய்தியை இனிக்கப்பாடும் பாவலர் கடுவனிள வெயினனார் ஆவர். "ஓங்குமலைப் பெருவிறற் பாம்பு நாண் கொளீஇ, ஒரு கணை கொண்டு மூவெயில் உடற்றி, பெருவிறல் அமரர்க்கு வென்றிதந்த, கறைமிடற்று அண்ணல்" என்று மருதனிள நாகனார் பாடும் புறநானூற்றுப் பாடல் இங்கே ஒப்பிடத்தக்கது.

## செம்பொருள் துணிவு:

சங்ககாலத்தில் சிவ வழிபாடு நிலைத்துப் பெருகியிருந்த காரணத்தாலேயே பாவலர்கள் அப்பெருமானைக் குறித்து ஆங்காங்குப் பாடியுள்ளனர். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் குடை முக்கட் செல்வர் திருக்கோயில் வலம் வருதற்கே தாழும் என்று புறம் கூறுகிறது. [2]திருக்கோயிலுக்குச் சென்று வலம் வந்து வழிபடுதல் பற்றிய மேற்கோள்கள் பலவற்றைச் சங்கநூல்களிற் காணலாம். 'செம்பொருள் காண்பது அறிவு' என்றார் திருவள்ளுவர். இச் செம்பொருளையே தமிழர் சிவம் என்று வழிபட்டனர். (சிவம், சிவப்பு, செம்மை எனக்காண்க) 'இச்செம்பொருள் துணிவே' சித்தாந்த நெறியாகும். இந் நெறியின் வடிவாகவே நம் இறைவன் உள்ளான். ஆதலின் அப்பெருமானையே 'செம்பொருள் துணிவே' என்று விளித்தார் மணிவாசகப் பெருமான். [3]இச் சிவ வழிபாடு பற்றிச் சங்க நூல்கள் கூறும் செய்திகளைப் பிற்காலத்துச் சைவ சமய தோத்திர சாத்திர நூல்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்தால் அவை புதுப் புதுக் கருத்துக்களை நல்கி இன்புறுத்தும் என்பதற்கு ஐயமும் உண்டோ?

---

[1] பரிபாடல் - 5; 22-23 வரிகள்; [2] புறம் - 55 [3] புறம் - பா 6; காரிகிழார் அருளியது. [3] திருவாசகம் - 37 பா. 1.

# "கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 28, இதழ் 3, பக்கம் 133இன் தொடர்ச்சி)

## (13) கடல் சுவற வேல் விட்டது

உக்கிரகுமார பாண்டியன் தன் தந்தையான சிவபெருமானிடமிருந்து வேல் - வளை - செண்டு பெற்று அரசாட்சியினை இனிதே நடாத்தி வருகின்றான். பாண்டிய நாடும் மழை வளத்தால் பிழைநெகிழ்ந்து பீடுற்றுத் திகழ்ந்தது.

குமாரபாண்டியன் மிகச் சிறப்புடன் தொண்ணூற்றாறு பரிமேத வேள்விகளைச் செய்து முடிக்கவே வானவர் தலைவன் இந்திரன் இவன்பால் பொறாமை கொண்டான்.

### ஆணைக்கு அடிபணிந்த ஆழியரசன் :

இந்திரன், கடலரசனை அழைத்து 'நீ யுகமுடிவில் பொங்குவதுபோற் பொங்கி மதுரையை அழிப்பாயாக' என்றாணையிட்டான். விளைவது உணராத வேலையானும் (வேலை-கடல்) தன் சம்மதத்தைத் தெரிவித்து நள்ளிரவில் ஓங்கியெழும் அலைக் கரங்களால் மதுரையின் அழிவை எழுதத் தொடங்கினான். நச்சுப் பல்லும் கரிய உடலுங்கொண்ட இராகு மதியை விழுங்க வருவதைப் போலவும் ஏழுமேகங்களும் இணைந்து மதுரையை மறைக்க வருதலையும் ஒத்து கடல் பொங்கி வந்தது.

வங்கவேலை வெள்ளமாட மதுரைமீது வருசெயல்
கங்குல்வாய திங்கள்மீது காரிவாய காருடல்
வெங்கண்வாள ராவிழுங்க வீழ்வதொக்கு மலதுகார்
அங்கண்மூட வருவதொக்கு மல்லதேது சொல்வதே.

ஆமையென்ற கேடயம் - வாளைமீன் என்னும் வாள் - சுறுமீன் களே யானைகள், - அலைக்கூட்டம் என்ற குதிரைகள். ஓடு கின்ற தோணிகளெனும் தேர்களொடு பகைவனின் படை வருவது போல பரவையும் விரைந்து வந்தது.

**வஞ்சகர்க்குதவி வலிமையிழந்த வரலாறு :**

கடல் பொங்கி வருவதை அறியாது உறங்குகின்முன் கன்னிநாடன். கழுதும் உறங்கும் அவ்விருளில் பாண்டியக் குலக் கடவுளான கண்ணுதல் உக்கிரவழுதியின் கனவில் தோன்றி 'மாற! உன் நகரை அழிக்கக் கடலரசன் விரைந்து வரும் அரவம் கேட்டிலையோ! ஒல்லையில் வேற்படையால் அதன் செருக்கடக்கு' என்றருளி மறைந்தார்.

கண்விழித்த வேம்பலர் தாரோன் விமலனது விரைகழல் வாழ்த்தி அமைச்சர், நகரமாந்தர் புடைசூழ கடலருகு வந்தான். ஆர்ப்பரித்து வரும் ஆழியையே சிறிது நேரம் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தபோது கருணையாளன் ஓர் சித்தர் வடிவாய் வந்து கடமையை நினைவூட்டினர். மனக்கலக்கம் தெளிந்த மாறன் தன் வேலை சிவபெருமான் திருவடி வழுத்தும் நெஞ்சுடன் வலமாகச் சுழற்றி யெறிந்தான். சுஃறென்ற ஒலியுடன் முழக்கமிட்டுவந்த முந்நீர் தருக்கழிந்து, வலிமை குன்றி, வழுதியின் திருவடிகளைத் தழுவி கழுவியது இந்திர னுக்கு உதவப்போய் உள்ள வலிமையையும் இழந்த கடலின் நிலைமை பரிதாபத்திற் குரியதாயிற்று.

.........வஞ்சகர்க்கு நன்றிசெய்து
இந்தவேலை வலியிழப்ப தென்றுமுள்ள தேகோலாம்

(சூரபத்மனுக்கு இடம் தந்து முருகன் வேலாலும் விருத்தி ராசுரனுக்கு மறைவிடமாகி அகத்தியர் ஆசமனத்தாலும் அழிந்துபட்ட செய்திகளைப் பரஞ்சோதியாரின் புலமை மிகு தொடர் நினைவூட்டுகிறது)

**மானவன் கருணை பெற்ற மீனவன் :**

மானமும் மாண்பும் பெற்ற மலைமகளின் தலைவன் சித்தர் உருவை மறைத்து வேதஒலியும் நாதஒலியும் தொடர வான் வழியாய் 'ஆலவாய்' அடைந்தார். பாண்டியன் தன்முன்னே

முக்கணும் - நான்கு புயங்களும், மூன்மதிக் கண்ணியும் பெற்ற செக்கரஞ்சடையோடு காட்சிதந்த தெய்வத்தின் திருவடியில் அடியற்ற மரமென விழுந்தான். திருக்கோயில் புகுந்து போக்கும் வரவும் இலாப் புனிதனை வணங்கி மதுரைக்கும் கடலுக்கும் இடையில் உள்ள பல ஊர்களையும் அம்பலத்தாடும் எம்பிரானுக்காக்கி அவனியை இனிது ஆண்டான்.

## (14) இந்திரன் முடிமேல் வளையெறிந்தது.

உக்கிரப் பெருவழுதியின் ஆட்சிக் காலத்தில் கோள்நிலை திரிந்தமையால் மழைவளங் குன்றியது. விண் பொய்க்கவே மண்ணில் பசியும் நோயும் பல்கிப் பெருகின. சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றுமே இந்நிலை அடையவே மூவேந்தர்களும் நன்னிலை பெற வேண்டி பொதியமலை சார்ந்து அகத்திய முனிவர் பிரானின் திருவடி வணங்கி நின்றனர். அகத்தியர் கோள் நிலைகளைச் செவ்வனே ஆய்ந்து சூரியன் செவ்வாய்க்கு முன்னே செல்ல - சுக்கிரன் இவர்களின் பின்னே செல்வதால் பன்னீராண்டுகள் வான் சுருங்கும் - ஆகவே மழை பெய்விப் போனைச் சென்று காணுங்கள் என்று உபாயம் கூறினர்.

தமிழ்வேந்தர் மூவரும் வானுலகம் செல்வதும் - இந்திரனுழைச் செல்வதும் எவ்வாறு என எண்ணி - உணர்த்தியருள வேண்டும் என்று இறைஞ்ச, அகத்தியர் 'சோமவார நோன்பை மேற்கொள்ள இவை சாத்தியமாகும்' - என்றுவழிகூறி விடை கொடுத்தார்.

### சோமவார நோன்பு :

முனிவர் சொற்படி மூவேந்தரும் சோமவார விரதம் மேற்கொள்ளலானார்கள். இவ்விரதம் ஐந்து வகைப்படும் 1. உச்சிப் பொழுதில் உண்ணுதல். 2. இரவில் உண்ணுதல். 3. இருவேளையும் உண்ணாதிருத்தல். 4. உறங்காதிருத்தல். 5. நான்கு யாமமும் சிவபூசை செய்தல். இதனுள் எதனை மேற்கொண்டாலும் அளவிறந்த பலன்கள் உண்டாகும். வானோர்களில் உயர்ந்த உத்தமனும் சிவனை உத்தமக்கிழமையாம் சோமவாரத்தில் பூசிக்கும் பேறே தனிச்சிறப்புடையதாகும்.

## புரந்தரனின் பொறுமை :

இப்படிச் சிறப்புடைய விரதம் நோற்று தமிழ் மூவேந்தரும் தன்னவைக்கு வருகிறார்கள் என்றறிந்த வானவர் தலைவன் தனது அரியணையின் கீழிருக்குமாறு மூன்று ஆசனங்களிடச் சொன்னான். மூவரசரும் வந்து முறையில் வணங்கினர். சேரனும் சோழனும் அவரவர் ஆசனத்திலமர பாண்டியன் மட்டும் வீற்றிருந்த விறலுடன் இந்திரனோடு ஆசனத்தில் சமமாக அமர்ந்தான். மனத்துள் வெகுண்ட இந்திரன் பொள்ளெனப் புறம் வேர்க்காமல் உள் வேர்த்தான். சேர - சோழர்களைப் பார்த்து நலம் உசாவி மழைவரம் நல்கினான். கன்னிநாடனின் தருக்கைக் குலைக்க எண்ணிப் பலராலும் சுமந்துவரப்பட்ட ஓர் ஒப்பற்ற ஆரத்தை அவன் கழுத்தில் பூட்டினான். மாறன் அதனை மலர் ஆரமென ஏற்றான். இந்திரன் தன் கர்வம் நீங்கி இன்று முதல் 'ஆரந்தாங்கு பாண்டியனாக நீ விளங்குவாய்' என்று கூறிப் புகழ்ந்து விடுத்தான். பாண்டியனும் மழைவரங் கேட்காமல் தன்னாடு திரும்பினான்.

## வேம்பலர் தாரான் விண்முகிலைச் சிறை செய்தான் :

வானுலக வள்ளலின் இன்னருளால் சேர சோழ நாடுகள் மழைபெற்று வசியும் வளனுங் கொழிக்க பாண்டியநாடு மட்டும் மழையின்றி வறண்டது. ஒருநாள் வேட்டைமேற்சென்ற பாண்டியன் பொதிய மலையின்மேல் மேய்ந்து கொண்டிருந்த நான்கு மேகங்களைச் சிறை செய்தான். புட்கலாவருத்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி என்ற அவைகளைச் சிறை செய்த செய்தி இந்திரனின் செவிகளை எட்டியது. பாண்டியன் ஆரந்தாங்கியமையும் கடல்சுவற வேல்விட்டமையும், மேகங்களைச் சிறை செய்தமையும் இந்திரனைப் பாண்டியன்மேல் படையெடுக்கத் தூண்டின.

## வழுதி வளை எறிந்தான் :

போர்ப்படை திரட்டிவந்த தேவேந்திரனை வழுதி நால் வகைப்படையொடும் சென்று எதிர்த்தான். பாண்டியநாட்டு வீரர்களுக்காற்றாமல் தேவர்படை பின்னிட்டுவிட்டது. இந்திரன் மிகக் கோபங்கொண்டு உக்கிரன்மேல் தெய்விகப்படைக்

கலங்களைத் தொடுத்தான் கதிரவன் படையைத் திங்கட்படையாலும் மோகக்கணையை ஞானக்கணையாலும் நரசிங்கப் படையை சரபப்படையாலும் தென்னவன் அழித்த பின்பு தந்தையார் தந்த வளைகொண்டு இந்திரன் முடியைத் தகர்த்தான்.

காய்சின மடங்க லன்னான் கைவளை சுழற்றிவல்லே
வீசினன் குலிசந் தன்னை வீழ்த்தது விடுத்தான் சென்னி
தேசினன் மகுடந் தள்ளிச் சிதைத்தது சிதைத்தலோடும்
கூசின னஞ்சிப்போனான் குன்றிற கரிந்தவீரன்.

இந்திரன் நாணித் தலைகுனிந்தான் சக்கரப்படை தன் தலையைத் தாக்காமல் முடியை மட்டும் கீழே தள்ளியது, தான் செய்த சிவபூசைப் பயத்தினால் என்றுணர்ந்து பின்னுகளை வழுத்தினான்.

போரில் புறங்காட்டிப் பொன்னுலகு வந்தபின்பு பாண்டியனுக்குத் திருமுகமொன்றனுப்பினான் இந்திரன். அதில் 'தனது மேகங்கள் நான்கையும் சிறைவீடு செய்தல் வேண்டும். நான் பாண்டிநாட்டின் வளத்தைப் பாதுகாப்பதைக் கடனாகக் கொள்வேன்' என எழுதியிருந்தான். உக்கிரப்பெருவழுதி இந்திரனின் வார்த்தைகளை நம்ப மறுத்தபோது ஒருவேளாளன், அரசே! 'இந்திரனின் சொல்லை நம்பி மேகங்களை விடுதலை செய்க. அவன் செயலுக்கு நான் பிணையாவேன்' என்றான். அவன் சொற்படி முகில்கள் தளைநீக்கம்பெற்றன. தேவர்கோன் ஏவலாலே திங்கள் மும்மாரி பெய்து - வாவியுங் குளனும் ஆறும் மடுக்களும் காவிசூழ் வயலும் செய்யும், செந்நெலும், கன்னற்காடும், பூவிரிபொழிலுங் காவும் பொலிவு பெற்றுப் பொலிந்தது கன்னிநாடு.

(வளரும்)

# பேரருள் இன்பம் பெற்றுள்

**சி. அ.**

கல்வி, அறிவு, நல்லொழுக்கம், தவம் முதலியன உயர்குலத் தார்க்குமட்டுமே உரியன என்பதில்லை. பிற குலத்தாரிடமும் இவை சிற்சில வேளைகளில் காணப்படுவதைப் பார்க்கின்றோம்.

" கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும்; மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும்; பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்; அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி "

என்று 'நான்மணிக் கடிகை' என்னும் நீதிநூலும்,

" வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே "

என்று புறநானூற்றுப் பாடலும் கூறுகின்றன. திருவள்ளுவரும்,

" மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்று ரனைத்திலர் பாடு "

என்கின்றார். இத்திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாகச் சிவஞான முனிவர் தமது சோமேசர் முதுமொழி வெண்பாவில் திருவள்ளுவர் சங்கத்தாரை வென்ற வரலாற்றையே காட்டுகின்றார்.

" மெய்த்ததிரு வள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்விநலந்
துய்த்தசங்கத் தார்தாழ்ந்தார் சோமேசா — உய்த்தறியின்
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்று ரனைத்திலர் பாடு "

என்பது அவ்வெண்பா.

அறுபான்மும்மைநாயன்மார்களில் கண்ணப்பர், திருநாளைப் போவார் போன்றாரை அறியாதவர் யாவர்! புராணங்களிலும்

இத்தகைய வரலாறுகள் பலவற்றைக் கேட்கின்றோம். எல்லாப் பிறப்பிலும் 'தேவப் பிறப்பு மிகச் சிறந்தது; புண்ணியத்தின் பயனாய் வருவது' என்பதும், 'இப்பிறப்பிற்கு எதிரானது அசுரப் பிறப்பு, அரக்கர் பிறப்பு' என்பதும் நூல்கள் வாயிலாக நாம் அறிபவை. ஆயினும், 'தேவர்கட்குத் தலைவனாகிய இந்திரன் தவற்றொழுக்கம் உடையனாகிக் கௌதம முனிவரால் சபிக்கப்பட்டான்; சந்திரன் குருபத்தினியிடத்துத் தவறாக நடந்து கொண்டமையால் குருவினது சாபத்திற்கு ஆளானான். இந்திரன் மகன் சீதையினிடம் தவறான எண்ணத்துடன் சென்று இராமனது கோபத்திற்கு இலக்காயினான்' என்று இவ்வாறு கூறப்படுவதையும், 'முப்புரத்தசுரருள் மூவர் சிவபெருமானிடம் பேரன்புடையவர்களாய் இருந்து பெரும் பயன் பெற்றனர். வாணன் என்னும் அசுரனும் அத்தகையோனாய்ச் சிவபிரானது திருநடனத்திற்குக் குடமுழா வாசிக்கும் பேறுபெற்றான். மற்றும் அசுரர் பலரும், அரக்கர் பலரும் மிக்க தவத்தைச் செய்து நலம் பெற்றார்கள்' என்று இவ்வாறு கூறப்படுவதையும் பார்க்கின்றோம். இத்தகைய நற்செயல்களில் பெண்டிரும் சில இடங்களில் சிறந்து நிற்றல் கருதத்தக்கது இவர்களில் இராவணனுடைய பட்டத்துத் தேவியாகிய வண்டோதரியும் ஒருத்தியாவள்.

இராவணன் முதலில் தனது செருக்கினால் கைலைமலையைப் பெயர்த்துச் சிவபெருமானால் அம்மலையின் கீழ் அடர்க்கப்பட்டுப் பெருந்துன்பத்தை எய்தினான் எனினும், பின்னர் இனிய இசையால் அப்பெருமானைத் துதித்து அவரால் நீண்ட வாழ்நாளும், யாவரையும் அழிக்கும் வன்மை வாய்ந்த வாட்படையும் பெற்று இலங்கை மீண்டு என்றும் சிவபூசை செய்து வாழ்ந்தான். அவனுடைய பட்டத்துத் தேவியும் தங்கட்கு நலம் பலவற்றை அளித்த சிவபிரானிடம் பேரன்பு கொண்டவளாய் அப்பெருமானை வழிபட்டு வந்தாள். அங்ஙனம் வழிபட்டு வந்தவள் பிறப்பில் பெருமானாகிய அவனைக் குழந்தையாகப் பெற்று எடுக்க வேண்டினாள். வேண்டுவார் வேண்டுவதே ஈபவன் சிவபெருமானாதலின், அவளது கருத்தும் முற்றுப் பெறுமாறு ஒருநாள் அவள்முன் குழந்தையாய்த் தோன்ற, வண்டோதரி அன்போடு எடுத்தணைத்து உச்சிமோந்து மகிழ்ந்திருக்கையில் இராவணன் அங்குவர, வண்டோதரி தான் பெற்ற பேற்றினை அவனிடம் தெரிவித்துக் குழந்தையை அவன் கையிற்

கொடுத்தாள். இராவணன் வாங்கி மகிழ்வுற்று அணைக்கும் பொழுது சிவபிரான் மறைந்தருளினர். யாவர்க்கும் குழந்தையாய்த் தோன்றாத பெருமான் வண்டோதரிக்குக் குழந்தையாகியது அவளது அன்பிற்காகக் கொண்ட திருவருளால் அன்றோ ! அதனால், அப்பேரருட் செயலை மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில் இரண்டிடங்களில் எடுத்துக் கூறி இன்புறுகின்றார். அவற்றுள் குயிற்பத்தில், 'வண்டோதரிக்கு இறைவன் வழங்கியது 'பேரருள் இன்பம்' என்று அவர் குறிக்கின்றார். எனவே, அப்பேரருள் இன்பத்தைப் பெற்ற வண்டோதரியின் சிறப்பும் திருவாசகத்தில் இடம்பெற்று விளங்கக் காண்கின்றோம்.

" ஏர்தரும் ஏழுல கேத்த
எவ்வுரு வுந்தன் னுருவாம்
ஆர்கலி சூழ்தென் னிலங்கை
அழகமர் வண்டோ தரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த
பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே
தென்பாண்டி நாடனைக் கூவாய்"

என்பது அத்திருவாசகம். மற்றொருதிருப்பாட்டு, 'திருவார்த்தை' என்னும் பகுதியில் உள்ளது :-

" வந்திமை யோர்கள் வணங்கி ஏத்த
மாக்கரு ணைக்கட லாய்அடியார்
பந்தனை விண்டற நல்கும் எங்கள்
பரமன் பெருந்துறை ஆதி அந்நாள்
உந்து திரைக்கட லைக்கடந்தன்
றோங்கு மதில்இலங் கைஅதனில்
பந்தணை மெல்விர லாட்கருளும்
பரிசறி வார்எம் பிரானா வாரே,

இன்னோரன்ன வரலாறுகளாலேனும் சிவபிரானிடம் அன்பு செய்யும் நிலை மக்கட்கு வாய்க்கின் நலமாகும்.

# சுக்கிரன்

வேதாந்த சிரோமணி,

பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

சூரிய மண்டலத்திலேயே மிகவும் ஒளியுள்ள கிரகமாக இருப்பதால் மேனாட்டார் இதைத் தங்களுடைய அழகுத் தெய்வத்தின் பெயராகிய வீனஸ் (Venus) என்ற பெயரால் அழைக்கின்றனர். இது சில சமயம் பின்னிரவும், சில சமயம் மாலை வேளையிலும் வானத்தில் சாதாரணக் கண்களுக்கே புலப்படும். காலையில் காணப்படுவதை விடிவெள்ளி என்றும் மாலையில் காணப்படுவதை மாலை நக்ஷத்திரம் என்றும் கூறுவர். சூரியனுக்கு அடுத்தசுற்றில் உள்ளது புதன் (Mercury). அதற்கு அடுத்துள்ளது சுக்கிரன். சூரியனை 225 நாட்களில் சுற்றும். இது புதனைப்போல் ஆறுமடங்கு ஒளியுடையது. தன்னிடம் விழும் ஒளியில் பாதிக்கு மேலான ஒளியை பிரதிபலிக்கச் செய்யும். சந்திரனைப்போல் எட்டுமடங்கு பிரதிபலிக்கும் தன்மையுடையது. இந்த கிரகத்தின் அடர்த்தி, கனம், பரிமாணம் முதலியன பூமியைப்போல் உள்ளன. இதனுடைய வாயு மண்டலத்தில் கார்பன்டையாக்ஸைடு மிகுதியாக உள்ளது. ஆதலின் இங்கு உயிர்கள் வாழமுடியாது. இதுவும் சந்திரனைப் போலவே சில சமயம் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே செல்லுகிறது. அக்காலத்தில் டெலஸ்கோப் மூலம் பார்த்தால் பிறை போல் தோற்றமளிக்கும். இது சூரியனை விட்டு 45 டிகிரிக்கு மேல் விலகி வருவதில்லை. அதாவது அடிவானத்திற்கும் உச்சிக்கும் உள்ள தூரத்தில் பாதிக்குமேல் விலகுவதில்லை.

பிருகு முனிவரின் புத்திரனாகிய இவன் குபேரனை வெருட்டவும் குபேரன் சிவனிடம் முறையிட்டான். நண்பனின் வேண்டுகோளால் சிவபெருமான் சுக்கிரனை விழுங்கிப் பிறகு தேவர்களின் வேண்டுகோளுக்கு இரங்கி வெளியிட்டார் என்று காசி காண்டம் கூறுவதாக உள்ளது. ஞானவாசிட்டம் திதிப்பிரகரணத்தில் பதிமூன்றுவது கதையாக சுக்கிரன் கதை வருகிறது. சுக்கிரன் விச்சுவாசி என்ற தேவ மாதுடன் கூடிப் பலப்பலப் பிறவிகளை எடுத்தான் என்று காணப்படுகிறது.

வியாழன் அறியாத மிருதசஞ்சீவினி என்ற மந்திரத்தை குருவின் மகனாக கசன் என்பவன் இவரிடம் உபதேசம்பெற பல காலம் சிஷ்யனாக இருந்து தொண்டு செய்தான். அக்காலத்தில் சுக்கிரனின் மகளான தேவயானி கசனிடம் அன்பு கொண்டாள். தேவகுருவின் மகன் மிருதசஞ்சீவினி மந்திரத்தை உபதேசம் பெற்றால் இறந்த தேவர்களும் நம்மைப்போல் உயிர் பெற்று எழுந்துவிடுவரே எனப் பயந்து அசுரர்கள் சுக்கிரன் அறியாத படி கசனைக் கொன்றுவிட்டனர். தேவயானியால் தூண்டப்பட்ட சுக்கிரன் அவனை மிருதசஞ்சீவினியால் பிழைக்க வைத்தார். இப்படிப் பல தடவை நடந்தது. கடைசியில் கோபம்கொண்ட அசுரர் கசனைச் சுட்டு எரித்துச் சாம்பலைப் பானத்துடன் கலந்து சுக்கிரனுக்கே கொடுத்துவிட்டனர். இம்முறையும் சுக்கிரன் அவனை உயிர்பெறும்படி செய்ய முயற்சித்தபோது தன் வயிற்றினுள் இருப்பது தெரிந்தது. கசன் பிழைத்தால் சுக்கிரன் இறப்பான் என்ற நிலை ஏற்பட்டது. அப்பொழுது தேவயானியின் தூண்டுதலால் வயிற்றினுள்ளே இருக்கும் கசனுக்கு சுக்கிரன் மந்திர உபதேசம் செய்துவிட்டு தான் மந்திரத்தை உபயோகித்து அவனை உயிர்ப்பித்தார். உயிர்பெற்று வெளி வந்த கசன், இறந்த தன்னுடைய ஆசிரியனை அம்மந்திர பலத்தால் பிழைக்க வைத்தான். இம்மாதிரி கசன் சுக்கிரனிடம் உபதேசம் பெற்றான் என்று பாரதம் கூறும்.

தண்டகன் என்ற அரசனுக்கு இவர் புரோகிதராய் இருந்த காலத்தில், அந்த இக்ஷ்வாகு வம்சத்தரசன், இவருடைய மற்றொரு பெண்ணாகிய அரசையிடம் தகாத முறையில் நடந்து கொண்டதற்காக அவனுடைய நாட்டை சபித்து மனுஷ்ய சஞ்சாரம் இல்லாத காடாக ஆக்கினார். அதுவே தண்டகாரண்யம் என்று ராமாயணம் கிஷ்கிந்தா காண்டம் 12 சர்க்கத்தில் கூறப்படுகிறது. (பார்க்கவஸ்ய சாபேன நிர்மனுஷ்யமிருகோபவத்) காமந்தகிய அர்த்த சாஸ்திரத்தில் தண்டகனுக்கு காமத்தாலும், ஜனமேஜயனுக்கு கோபத்தாலும் அழிவு" என்று கூறுவதால் தண்டகனுடைய நாடு அழியக் காரணம் காமம் என்று தெரிகிறது.

இவர் தபம் செய்யும்பொழுது இவருடைய தபத்தைக் கெடுக்க இந்திரன் அனுப்பிய அவன் மகளான ஜயந்தியை தபத்தின் முடிவில் மணந்து, பிறருடைய இடையூறு இன்றி பல காலம் இன்புற்று இருக்க நினைத்து அவளுடன் இவர் மறைந்து விட்டார். அக்காலத்தில் வியாழன் சுக்கிரன் உருவில் அசுரர்களிடம் சென்று வஞ்சனையாகப் பல சாஸ்திரங்களைக் கற்பித்தார்.

உண்மையான சுக்கிரன் வந்து சேர்ந்தவுடன், அசுரர்கள் "யார் உண்மையான சுக்கிரன்" என்பது அறியாமல் மயங்கினர். வியாழன் தன் வாக்கின் வன்மையால், உண்மையான சுக்கிரனை அவமதிக்கும்படி அசுரர்களைச் செய்தார். அதனால் கோபம் கொண்ட சுக்கிரன் அசுரர்களைச் சபிக்கவும், தனது எண்ணம் ஈடேறியதால் சிறிது நாளில் வியாழனும் மறைந்து விட்டார் என்று தேவிபாகவதம் கூறும்.

அந்தகாசுரவதகாலத்தில் கொன்ற அசுரர்களை யெல்லாம் இவர் பிழைக்கச் செய்தமையால் சினந்த சிவபெருமான் இவரை விழுங்கிவிட்டார். அந்தகாசுரவதத்திற்குப் பிறகு, தனது இந்திரியமாக இவரை வெளியிட்டார். ஆதலால்தான் இவருக்கு சுக்கிரன் என்று பெயர் என்று பத்மபுராணம் கூறும். இவருக்கு நான்கு பிள்ளைகள் இருந்தனர் எனக் கூறப்படுகிறது.

வாமனவதாரம் எடுத்த பெருமான் மகாபலிசக்ரவர்த்தியிடம் மூன்று அடி மண் யாசித்தார்; அப்பொழுது பலியின் ஆசிரியரான சுக்கிரன் தடுத்தும் கேளாமல் மகாபலிதானம் செய்யத் தொடங்கிய பொழுது சுக்கிரன் வண்டு ரூபமாக கிண்டியின் உள்ளே புகுந்து நீர் வெளிவரும் துவாரத்தைத் தடுத்தார். நீர் விட்டுத்தான் தானம் செய்யவேண்டும் என்பது விதி. கிண்டியிலிருந்து நீர் விழாது போகவே, சுக்கிராச்சாரியாரின் செய்கையை உணர்ந்த வாமன ரூபியான திருமால் குச்சியினால் கிண்டியின் துவாரத்தைக் குத்தினர். அதனால் சுக்கிரனுடைய கண் குருடாயிற்று என்றும் புராணம் கூறும்.

ரிக்வேதத்திற்கு - குரு. யசுர்வேதத்திற்கு - சுக்கிரன். சாமவேதத்திற்கு - செவ்வாய். அதர்வ வேதத்திற்கு - புதனும் சாகாதீசன் ஆதலான், அந்த அந்த வேதிகளுக்கு உபநயனத்தில் மேற்கூறிய சாகாதீசர்களின் மௌட்யமும், நீசமும் கூடாது என்று தர்மசாஸ்திரம் கூறும்.

ஜ்யோதிடத்தில் :- வெண்மையான நிறம் உடையவர். வெண்ணிறமான புஷ்பம், சந்தனம், கொடி, குடைமாலை, வஸ்திரம் இவற்றில் பிரியமுள்ளவர். சூரியனுக்கு கிழக்கே கிழக்குமுகமாக இருப்பவர், பத்மாசனத்தில் இருப்பவர், நான்கு கையுடையவர். பார்க்கவகோத்திரத்தில் பிறந்தவர். காம்போஜ தேசத்துக்கதிபதி. மன்மத வருஷம் தசமியில் பூச நக்ஷத்திரத்தில் பிறந்தார் என்று நவக்கிரக ஆராதனக் கிரமம் கூறும். ஆனால் அஷ்டோத்தர சதநாமாவில் (ஸ்காந்த புராணத்தி

லுள்ளது) ஜ்யேஷ்டா நக்ஷத்ரசம்பூதாய நம; என்று கேட்டையில் பிறந்ததாகக் காணப்படுகிறது. மொச்சைக்கொட்டை இவருக்குரிய தான்யம். ஐந்துகோண மண்டலத்திலிருப்பவர். அதிதேவதை இந்திராணி, பிரத்யதி தேவதை இந்திரன். துலா ரிஷப ராசிகளுக்கு அதிபதி. களத்திரகாரகன், மீனத்தில் உச்சன். பிராமணஜாதி. வெண்தாமரை இவனுக்குரிய புஷ்பம் வெள்ளி உலோகமாகும். அத்தி சமித்து.

சுக்கிரனுடைய தசாபுத்திகளுக்கு உமாசம்கிதையில் கண்ட பரிகாரமான ராமாயண சர்க்கங்கள் நிவேதனம் முதலியன :-

சுக்ர தெசைக்காக பாலகாண்டம் 73 சர்க்கத்தைப்பாராயணம் செய்யவேண்டும். முதலிலும் கடைசியிலும் கற்கண்டு நிவேதம் செய்யவேண்டும். கடைசியில் சுமங்கலிகளுக்குத் தாம்பூலம், புஷ்பம், தக்ஷிணை கொடுக்கவேண்டும்.

சுக்கிரதசையில் சுக்கிரபுத்தி ஆண்களுக்கு ஆயின் சுந்தர காண்டம் 36 ஆவது சர்க்கம். பெண்களுக்காயின் 33 ஆவது சர்க்கம். (தினம் மூன்று காலம் பாராயணம் செய்ய வேண்டும்) கற்கண்டு முன்னும் பின்னும் நிவேதனம். சூரிய புத்திக்குப் பாலகாண்டம் 67 ஆவது சர்க்கம் கரும்பு நிவேதனம். சந்திரபுத்திக்கு உத்தரகாண்டம் 87 to 90 சர்க்கங்கள் நிவேதனம் பால். சந்திரோதய காலத்தில் சந்திர மண்டலத்தில் தேவியை தியானித்துப் பாராயணம் செய்யவேண்டும். செவ்வாய் புக்திக்கு அயோத்யா காண்டம் 115 ஆவது சர்க்கம். சக்கரைப் பொங்கல் நிவேதனம். புதன் புத்திக்கு உத்தரகாண்டம் 6 to 8 ஆவது சர்க்கங்கள். திராக்ஷைப் பழம் நிவேதனம். குரு புத்திக்குப் பாலகாண்டம் 14 ஆவது சர்க்கம். வாழைப்பழம் நிவேதனம். சனி புத்திக்கு யுத்தகாண்டம் 102 ஆவது சர்க்கம். நாகப்பழம் நிவேதனம். இராகு புத்திக்கு ஆரண்ய காண்டம் 4 ஆவது சர்க்கம். நிவேதனம் தேன். கேது புக்திக்கு யுத்த காண்டம் 19 to 22 ஆவது சர்க்கங்கள். தேங்காய் நிவேதனம்.

மற்ற கிரகங்களின் தெசையில் சுக்கிர புத்திக்குப் பரிகாரம் வருமாறு ;-

சூரிய தசையில் அயோத்தி காண்டம் 118 ஆவது சர்க்கம்.

சந்திர தசையில் யுத்த காண்டம் 121 ஆவது சர்க்கம்.

குஜ தசையில் சுந்தரகாண்டம் 53 ஆவது சர்க்கம்.

புத தசையில் ஆரண்ய காண்டம் 9, 10 ஆவது சர்க்கங்கள்.

குரு தசையில் பாலகாண்டம் 77 ஆவது சர்க்கம்.

சனி தசையில் சுந்தரகாண்டம் 38 ஆவது சர்க்கம்.

ராகு தசையில் சுந்தரகாண்டம் 65 ஆவது சர்க்கம்.

கேது தசையிலும் சுந்தரகாண்டம் 65 ஆவது சர்க்கம்.

இவ்வாறு மற்ற கிரகங்களின் தசையில் சுக்ரபுத்தி காலதோஷ பரிகாரமாகச் சொல்லப்பட்ட மேற்கூறிய எல்லாவற்றிற்குமே கற்கண்டுதான் நிவேதனப் பொருளாகக் கூறப்பட்டிருக்கிறது.

சுக்கிரனுடைய மந்திரத்தியானத்தில் ஜபமாலை, வரதம், தண்டம் கமண்டுலு இவற்றைத் தரித்த நான்கு கையுடையவராகக் கூறப்படுகிறது. கவச ஸ்தோத்திரத்திலும் அப்படியே கூறப்படுகிறது.

சக்ர, சுபக்ரஹ ஸ்ரீமான் என்று தொடங்கும் 21 நாமங்கள் கொண்ட ஒரு ஸ்துதியும் உள்ளது. ஸ்காந்தத்திலுள்ள அஷ்டோத்தர சதநாமாவில் மழையைக்கொடுப்பவன் (வர்ஷப்ர தாய நம:). கேட்டையில் பிறந்தவன் (ஜ்யேஷ்டா நக்ஷத்ரசம் பூதாய நம:) கௌட தேசத்துக்கு அதிபதி (கௌடதேசேச்வ ராய நம:) என்பனபோன்றவை கூறப்படுகின்றன. தேசம், நக்ஷத்திரம் முதலியவற்றின் மாறுபாடு கல்பபேதத்தால் கொள்ள வேண்டும்.

பார்க்கவாய விக்மஹே (அ)சுராசார்யாய தீமஹி
தன்ன: சுக்ர: ப்ரசோயாத்

என்றும்,

தைத்யாசார்யாய வித்மஹே பார்க்கவாய தீமஹி।
தன்ன: சுக்ர: ப்ரசோதயாத்

என்றும் ஒரே காயத்ரியாயினும் சிறிது மாறுபட்டுக் காணப்படுகிறது.

பிரயாணத்திற்கு புரச்சுக்ரன் (முன்னால் சுக்கிரன் இருத்தல்) கூடாது என்பர். பின்னால் இருக்கலாம். பரணி, பூரம், பூராடம் நக்ஷத்திரங்களில் ஜனித்தவர்களுக்கு முதலில் இவருடைய தசை இருபது ஆண்டுகள், சுக்கிர தசையைச் சிறப்பாகக் கூறினும் அவரவர்களுக்குத்தக்கவாறு தான் பலனளிக்கும்.

# சோழ வேந்தர் சமயப் பணி

திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர்,
**வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.**

## தொன்மை

பண்டைத் தமிழ் கூறும் நல்லுலகம் குடகுலம், குணகுலம், தென்குலம் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் பெற்றிருந்தது. இவற்றை முறையே சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் அரசாட்சி புரிந்தனர். முடியுடை மூவேந்தர் என்று போற்றப் படும் இவர்களது நல்லாட்சியில் நாடு வளம் பெற்றது. இம் மூவேந்தரும் வலிகுன்றிய நாட்களில் தன்னுரிமை பெற்றவர் கள் குறுநில மன்னர் எனப்படுவர், இவர்கள் நாட்டின் பல பகுதிகளை அரசாண்ட போதிலும் முடியுடை மன்னர்கள் என்ற சிறப்புக்கு உரியவர்கள் அல்லர்.

பழங்குடி என்ற திருக்குறள் தொடருக்குப் பரிமேலழகர் ' சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் என்றாற்போலப் படைப்புக்காலம் தொட்டு மேம்பட்டு வரும் பழங்குடிகள் ' என்று விளக்கம் தருகின்றார். இதனை நோக்குமிடத்து, இம்மூவேந்தரும் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே மூத்த குடியின ராய் நம் தமிழகத்தை அரசு புரிந்தவர் என்பதனை அறிகின்றோம்.

மூவேந்தர்களது தோற்றத்தை வரலாற்று அடிப்படையில் காணுதல் இயலாததொன்று. ஆயினும் நமக்குக் கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு இவர்களது குடியின் தொன்மையை ஒருவாறு நாமறியலாம். தமிழிலக்கிய, இலக்கண நூல்களில் பழமையானதாய் இலங்கும் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலில், இம்மூவேந்தரைப் பற்றிய குறிப்புக்கள் காணப் படுகின்றன.

" வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு "

எனவும்,

" போந்தை வேம்பே ஆரென வரூஉம் மாபெருந்தானையர் மலைந்த பூவும் "

எனவும் வரும் நூற்பாக்களை நோக்குமிடத்துத் தொல்காப்பியத்துக்கு முன்பே இவர்களது நல்லாட்சி நாட்டில் நிலவி வந்ததை நாமறியலாம். வால்மீகி இராமாயணம், வியாசர் பாரத காலங்களுக்கு முன்பே இம் மூவேந்தரது ஆட்சி தமிழகத்தில் நிலவி வந்ததை அந்நூல்களின் குறிப்புக்களிலிருந்து நாம் நன்குணரலாம். கி. மு. 3-ம் நூற்றாண்டில் மகதநாட்டை ஆட்சி புரிந்த மகத மன்னனின் கல்வெட்டுக்களிலும், இம் மன்னர்களைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. கிரேக்கர்களும். உரோமர்களும் நம்நாட்டு மன்னர்களோடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்ததை மேலைநாட்டு ஆசிரியர்கள் எழுதிய நூல்களும், குறிப்புக்களும் உணர்த்துகின்றன. இவ்வாறு தொன்று தொட்டுவந்த மூவேந்தர்களில் காவிரிநாடு எனவும், பொன்னி நாடு எனவும் போற்றப்படும். சோழ மண்டலத்தின் தலைவர்களாக விளங்கியவர்கள் சோழ மன்னர்கள் ஆவர்.

சோழ மன்னர்களின் வள்ளாண்மையும், கலைப்பணியும், சமயப் பணியும், உலகம் போற்றும் சிறப்புடையவை. தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே, மண்ணாவதும் சோழ மண்டலமேஎன்றுபுலவர் புகழும் சிறப்பைச்சோழநாடு பெற்றது. "சோழவளநாடு சோறுடைத்து" என்ற சிறப்பும் இந்நாட்டுக்கு ஏற்பட்டது.

கி. பி. முதல் நூற்றாண்டில் மேல்நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்த யவன ஆசிரியனை தாலமி என்பவனது வரலாற்றுக் குறிப்பிலும் இம்மூவேந்தரது ஆட்சி பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. சங்ககால இலக்கியங்களில் தமிழகத்துடன் கிரேக்கர் யவனர் சோனகர் ஆகிய மேலைநாட்டினர் வாணிகத்தொடர்பு கொண்டிருந்த செய்திகள் காணப்படுகின்றன.

சோழர் சூரிய குலத்தினர் என்று போற்றப்பெறுவர். 'செங்கதிர்ச்செல்வன் திருக்குலம்' எனச் சோழர் மரபைப் போற்றுகிறது மணிமேகலை. இவர்களுடைய கொடியின் சின்னம் புலி. ஆத்திமாலை இவர்களுக்குரிய அடையாள மாலை. கடற்றுறை புகார், நாகை ஆகியன.

இவர்கள் ஆட்சி புரிந்த தலைநகரங்கள் உறையூர். காவிரிப் பூம்பட்டினம், தஞ்சை, கங்கைகொண்டசோழபுரம், பழையாறை ஆகிய ஊர்களாகும். இவற்றுள் உறையூரும், புகாரும் சங்ககாலச் சோழ மன்னர்கள் அரசுபுரிந்த நகரங்கள். தஞ்சையும்

கங்கைகொண்டசோழபுரமும் பிற்காலச் சோழர் அரசுபுரிந்து வாழ்ந்த நகரங்கள். பழையாறை நகர் சோழர், பல்லவர்க்குகீழ்க் குறுநிலமன்னர்களாய் வாழ்ந்த இடம். பழையாறை பிற்காலச் சோழமன்னர் காலத்தும் தலைநகராயிருந்துள்ளது.

சோழ நாட்டின் எல்லைகள் காலத்துக்குக்காலம் மாறிக் கொண்டே வந்தன எனினும் சிதம்பரத்திற்கு வடக்கே ஓடும் வெள்ளாறு வடஎல்லை எனவும், புதுக்கோட்டைச் சீமையில் ஓடும் தென்வெள்ளாறு தென்எல்லை எனவும், கருவூர்க் கோட்டைக் கரை மேற்கெல்லை எனவும், வங்கக்கடல் கிழக்கெல்லை எனவும் கூறுவர்.

> " கடல் கிழக்குத் தெற்குக் கரைபொருவெள் ளாறு
> குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
> ஏணாட்டுப் பண்ணை யிருபத்து நாற்காதம்
> சோணாட்டுக் கெல்லை யெனச் சொல் "

இந்நில எல்லை தஞ்சை, திருச்சி மாவட்டங்களையும் தென்னார்க் காடு மாவட்டத்தின் கீழ்ப்பகுதியையும் கொண்டது.

சமயப் பற்று:

தமிழ் மன்னர்கள் அனைவரும் தாங்கள் வாழ்ந்த அரண்மனை களைச் சிறப்புறக் கட்டிக்காத்துப் பேணவில்லை. மிகப்பெரிய ஆலயங்களை எழுப்பித் தம் புகழைக் குன்றின்மேல் இட்ட விளக்குப்போல நிலைபெறச் செய்துவந்தமையை நாம் நன்குணரவேண்டும். சோழர்கள் வாழ்ந்த தலைநகரங் களில் அரண்மனைகள் இன்று இல்லை. ஆனால் அவர்கள் எழுப்பிய கோயில்கள் இன்றும் அவர்கள் புகழ் பாடுவதைக் காண்கின்றோம். சிறப்பாகச் சோழமன்னர்கள் சோழவளநாடு முழுதும் திருக்கோயில்களைக் காவிரியின் இருகரை மருங்கும் எழுப்பி நாட்டு மக்களுக்கு நல்லதோர் சமயப்பணி செய்து வந்தமையை வரலாறு உணர்த்துகின்றது. சங்க காலத்திற்கு முற்பட்ட சோழர்கள் மாந்தாதா சிபி முதலியோராவர்.

முசுகுந்தச் சோழன்:

சோழர்களின் முன்னோனாகிய முசுகுந்த சக்ரவர்த்தியின் வரலாறு அவனைச் சிறந்த சிவபக்தன் என்பதை எடுத்துக் காட்டும். இவன் இந்திரனுக்குச்செய்த உதவிக்காக ஏழு தியாக ராஜர் திருவுருவங்களை அவனிடமிருந்து பரிசாகப்பெற்றுத் தமிழ் நாட்டில் திருவாரூர், திருக்குவளை, திருக்காறாயில், திருமறைக் காடு, திருநாகைக்காரோணம், திருநள்ளாறு, திருவாய்மூர் ஆகிய தலங்களில் பிரதிஷ்டைசெய்தான் என்பது பழமையான

வரலாறு. இத் தலங்களைச் சப்த விடங்கத் தலங்கள் என்பர்.

## மனுநீதிச் சோழன் :

மனுநீதிச்சோழன் திருவாரூரில் மனுநீதிப்படி அரசாண்ட மாமன்னன். இவனது வரலாற்றைப் பெரியபுராணம் விரிவாகக் கூறுகின்றது. பசுவின் கன்றைக் கொன்ற குற்றத்திற்காகத் தன் மகனையே தேர்க்காலிலிட்டுக் கொன்று நீதியை நிலைநிறுத்திய மன்னனின் அன்புக்குத் தியாகேசன் இறந்த கன்றையும் மகனையும் எழுப்பித்தந்து அருள்புரிந்த வரலாற்றை இதனுட் காணலாம்.

## கோச்செங்கட் சோழன் :

சங்ககாலச் சோழ மன்னர்களில் 'இறுதியில் அரசுபுரிந்த அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவரும் சோழமன்னருமான கோச்செங்கட்சோழ நாயனர் செய்த சமயப் பணிகள் வரலாற்றுச் சிறப்புடையவை. இவர் முற்பிறவியில் சிலந்தியாக இருந்து திருவானைக்கா இறைவரைப் பக்தி செய்து வழிபட்ட காரணத்தால் கோச்செங்கட்சோழராகப் பிறந்தார் என்பது வரலாறு.

" சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற்பந்தர் செய்து
உலந்தவண் இறந்தபோதே கோச்செங்கணனுமாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே "

என்பது திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம். இச் சோழர் யானை ஏருத எழுபது மாடக்கோயில்கள் கட்டினர்.

" எண்டோள் ஈசற்கு எழில்மாடம் எழுபதுசெய் துலகம்
[ ஆண்டான் "

என்பது திருமங்கை மன்னன் திருவாக்கு.

## பழையாறைச் சோழன் :

திருநாவுக்கரசு சுவாமிகள் சோழநாட்டுப் பழையாறையில் இறைவனை அமணர்மறைத்துவைத்திருப்பதையறிந்து வருந்திச் சிவலிங்கப்பெருமானைக் கண்டு வழிபட்ட பின்னரே உணவு உண்பேன் என்று உண்ணாநோன்பு மேற்கொண்டார். அவ்வூரிலிருந்த சோழ வேந்தன் ஒருவன் மீண்டும் கோயிலில் அப்பெருமானை எழுந்தருளுவித்து வழிபாடியற்றச் செய்து திருநாவுக்கரசு சுவாமிகளின் இன்னலைப் போக்கினன் என்று

பெரியபுராணம் கூறுகிறது. இம்மன்னன் திருநாவுக்கரசர் காலமாகிய கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் பல்லவர் ஆட்சிக்கு அடங்கிப் பழையாறையில் வாழ்ந்த ஒரு சோழ மன்னனாவான்.

## மணிமுடிச் சோழன் :

திருத்தொண்டத் தொகையில் கூறப்பெறும் நாயன்மார்களில் மற்றொருவர் புகழ்ச் சோழர் எனப்படுவார். பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர் என இவரைத் திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் போற்றியுள்ளார். இவரது தலைநகர் உறையூர். சிவனடியார்களை உபசரித்து அவர்கள் விரும்புவனவற்றை வழங்கித் தொண்டு செய்தவர். எறிபத்தர் என்ற சிவனடியார், சிவகாமியாண்டார் எடுத்துவந்த பூக்குடலையை இடறிய குற்றத்திற்காகத் தன் பட்டத்து யானையையும் பாகர்களையும் வெட்டினார் என்ற செய்தி கேட்டு, எறிபத்தரை அடைந்து, இக் குற்றத்தில் எனக்கும் பங்குண்டு; என்னையும் கொல்லவேண்டும் என்று கேட்க, இச் சோழ வேந்தரது பக்தித் திறமறிந்து இவ்வன்பர் மனம் வேகுமாறு நடந்துகொண்டதற்கு வருந்தி எறிபத்தர் தம்மையே மாய்த்துக்கொள்ள முற்படும்பொழுது இறைவன் வெளிப்பட்டுத் தடுத்து அருள்புரிந்தனன் என்பது வரலாறு. ஒருமுறை பகை மன்னன் அதிகன் என்பானோடு இவர் போர் புரிந்தபோது இறந்துபட்ட பகைவர்களின் தலைகள் ஒன்றில் சிறு சடை யிருந்ததைக்கண்டு இவர் சிவனடியாரேயாவர். இவரை அறியாது கொன்றோமே என்று தம்மையே நொந்து தீப்பாய்ந்து இறந்தார். இறைவன் இவரது அன்பின் பெருக்கினையுணர்ந்து அருள்புரிந்தான் என்பது வரலாறு.

## புகழ்ச் சோழர் :

கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடையில் பாண்டிய நாட்டில் அரசு புரிந்தவன் நின்றசீர்நெடுமாறன். இவனும் அறுபான் மும்மை நாயன்மார்களில் ஒருவன். இவனது மனைவியார் மங்கையர்க்கரசியார். இவ்வம்மையார் சோழ மன்னனின் திருமகள் "மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை வரிவளைக்கை மடமானி" என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு. பாண்டிய நாட்டில் பரவியிருந்த சமணிருளை ஒட்டி இந்நாட்டில் சைவ ஒளி பரப்புதற்கு ஞானசம்பந்தப் பெருமானைத் தன் நாட்டிற்கு அழைத்துச்சென்று சைவம் பெருக்கிய தெய்வக் குலக்கொடி இவ்வம்மையார். சோழர் குலக்கொடியாகிய மங்கையர்க்கரசியாரைச் சமய உலகம் எங்கள் தெய்வம் என்று கொண்டாடும். இவ்வம்மையாரின் தந்தை மணிமுடிச் சோழன் என்பவனாவன்.

கி. பி. எட்டாம் நூற்றாண்டில் சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனுருடன் மதுரை சென்றபோது பாண்டிய வேந்தனும் அவனுடைய மருகனுகிய சோழ வேந்தனும் எதிர்கொண்டழைத்தனர் என்று பெரிய புராணம் கூறுகிறது. மூன்று குலத் தமிழ் மன்னருடனும் சுந்தரர், மதுரை திருப்பரங்குன்றம் முதலான தலங்களுக்குச் சென்று வழிபட்டார் என்பதை அவருடையதேவாரத்திலிருந்தும் நாம் நன்கறியலாம்.

" அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமென்
நமரர்பெரு மானையா ரூரன்அஞ்சி
முடியால்உல காண்டமூ வேந்தர்முன்னே
மொழிந்தாறுமோர் நான்குமோ ரொன்றினையும்
படியா இவை கற்றுவல் லவ்வடியார்
பரங்குன்றமே யபர மன்னடிக்கே
குடியாகிவா னோர்க்கும்ஓர் கோவுமாகிக்
குலவேந்தராய் விண்முழு தாள்பவரே "

என்பது சுந்தரர் தேவாரம்.

இவ்வாறு சோழர் குலத்தில் முன்னோர் செய்த சமயப் பணிகளைப் பின்பற்றிப் பிற்காலச் சோழ மன்னர் விளங்கினர் என்பதனைக் காணலாம்.

## சோழர் குல தெய்வம் :

சோழர் குல தெய்வம் தில்லை நடராசப் பெருமான். சோழ மன்னர் தங்கள் குல முதல்வனுகிய நடராசப் பெருமானை அன்போடு போற்றி வழிபட்டவர்கள். பராந்தக சோழன் முதலிய பலர் தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்து பொன்னம்பலமாக்கினுர்கள். இவ்வாறு சோழ மன்னர்கள் சிவபக்தியில் சிறப்பாகத் தலைநின்ற காரணத்தால் புறச் சமயங்கள் நம் நாட்டில் மேலோங்கிய காலத்திலும் சோழவேந்தர் மட்டும் சமணம், பௌத்தம் போன்ற மதங்களை சார்ந்து மதம் மாறியதாக வரலாறில்லை. மதங்களில் பொது நோக்குடையவர்களாக இருந்தார்களே யன்றிச் சோழர் மதம் மாறினர் என்று கூறும் வரலாறு யாண்டுமில்லை. இதனுல்தான் நம்பியாண்டார் நம்பிகள்

" மைவைத்த கண்டன் நெறியன்றி மற்றோர் நெறிகருதாத்
தெய்வக்குடி "

என்று இச் சோழர் குடியைச் சிறப்பித்துப் போற்றுவாராயினர். சோழர் குடியினருக்குத் தில்லைவாழந்தணர் முடிசூட்டிவந்துள்ள மரபைப் பெரிய புராணத்துட் காண்கிறோம்.

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான்,

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 28, இதழ் 3, பக்கம் 154 இன் தொடர்ச்சி)

ரத்னலிங்க அங்கபூஜை மிகவும் சிறந்தது. அதில் மரகத லிங்கம்-புஷ்டியையும், பத்மராகலிங்கம் தனத்தையும், வைடூர்ய லிங்கம்-ஆயுளையும், ஸ்படிகலிங்கம் - மக்கட்பேற்றையும், புஷ்பராகம் - ஸ்தம்பன சக்தியையும், பவழலிங்கம் வச்யத்தையும், வைரலிங்கம் ஆகர்ஷணத்தையும், மாணிக்கலிங்கம் சர்வசித்தியையும் இந்திரநீலலிங்கம் மோக்ஷத்தையுமளிக்கும் என்று சிந்தியம் என்ற ஆகமம் கூறுகிறது

லோஹலிங்கங்களில் சுவர்ணலிங்கம் புத்தி முக்தியளிக்கும், செம்பு - புத்ரப்ரதம், வெள்ளி - சோபையைத்தரும், மற்றவை சாமானியம். இரும்புலிங்கம் சத்ருநாசம்செய்யும். மூன்றுஉலோக இலிங்கம் கூடாது ; மரணப்ரதம். ஒருவர் ஒருலிங்கம், மூன்று லிங்கம், ஐந்து லிங்கம், ஏழு லிங்கம், ஒன்பது லிங்கம் பூஜை செய்யலாம். அதன் பலன் முறையே, மோக்ஷம், போகமோக்ஷம் பஞ்சபாதகநாசம், சத்ருநாசம், சிவலோகப்ராப்தி உண்டாகும்.

இதுபோல் இரண்டு, நான்கு, ஆறு, எட்டு லிங்கங்கள் வைத்துப் பூஜைசெய்யக்கூடாது. அவை, வியாதி, ஈர்த்திஹானி, மரணம், பெருநோய் இவைகளை உண்டாக்கும் என காரணாகமம் கூறுகிறது.

சுவாயம்புவம் முதலான அசல லிங்கங்கள் பரார்த்த பூஜையில் உபயோகம். ரத்ன லோஹ லிங்கம் பிம்பம் இவைகள் ஆத்மார்த்தம் பரார்த்தம் இரண்டிலும் உபயோகமாகும்.

ஆன்மார்த்த பூஜைக்கு மாத்திரம் உபயோகமுள்ள இலிங்கம் பன்னிரண்டு ஆகும். அவை,

सिकतं तण्डुलं चान्नं नदीमृद्गोमयं तथा ।
नवनीतं च रुद्राक्षं चन्दनं कूर्चमेव च ॥
पुष्पमाला गुळं पिष्टं क्षणिका द्वादशोच्यते ।

— காரணாகமம்.

மணல், அரிசி, அன்னம், ஆற்றுமண், சாணி, வெண்ணை, ருத்ராக்ஷம், சந்தனம், கூர்ச்சம், புஷ்பமாலை, வெல்லம், மாவு, என பன்னிரண்டுவிதமாகும். பூஜையின் முடிவில் க்ஷணிக லிங்கங்கள் உத்வாசனம் செய்துவிடத்தக்கன. அங்குப் பூஜிக்கப்பட்ட இறைவனை ஹ்ருதயத்தில் ஸ்தாபித்துக்கொண்டு, அதை விடவேண்டும்.

एतेषां चैव लिङ्गानां नप्रमाणं न च स्थितिः ॥

— சுப்பிரதிபாகமம்.

இந்த க்ஷணிக லிங்கங்களுக்கு அளவு கிடையாது. ஸ்திரமாக வைப்பதும் கிடையாது. இவ்வாறு அவ்வியக்த லிங்கங்களுடைய லக்ஷணம் கூறப்பட்டது. இந்த அவ்யக்த லிங்கங்களை பிரதிஷ்டை செய்து பூஜிக்குமிடம் ஆலயம்.

ப்ராஸாதம், பவனம், ஸத்ம, நிகேதனம், மந்திரம் ஆலயம் என்பன இதன் பர்யாய வாக்கியங்கள்.

लक्षणेनालयं कुर्याल्लिङ्गमानवशादपि ।

— காரணாகமம்.

லிங்கத்தின் அளவினால் கர்ப்பக்கிரகத்தையும் அதன் அளவினால் பித்தியையும் செய்யவேண்டும் என்பதும் ஒருமுறை.

लिङ्गात्पीठस्ततो गर्भो गर्भात् भित्तिविनिश्चयः ।
एकात्सप्त यवान्तं तु मात्रादेकविवृद्धितः ॥

— உத்தரகாமிகம்.

இலிங்கத்தினின்றும் பீடத்தையும் பீடத்தினின்றும் சுவற்றையும் நிச்சயம் செய்யவேண்டும். ஒவ்வொன்றும் ஏழு ஏழு யவம் வரையிலுமாவது அல்லது மாத்ராங்குலத்தினாலாவது விருத்தி செய்து அமைக்கவேண்டும்.

**கர்ப்பக்ரஹம் :**

இலிங்கம் இருக்குமிடம் கர்ப்பக்கிரஹம் என்று பெயர். பிறகு அர்த்தமண்டபம், ஸ்நபனமண்டபம், வ்ருஷபமண்டபம், ந்ருத்த மண்டபம், தேவமண்டபம் முதலிய மண்டபங்களை நிர்மாணம் செய்யவேண்டும்.

கருப்பக்கிரகத்தைச் சுற்றிலும் இருக்கும் ப்ராகாரம் அந்தர் மண்டலம் அந்தர்ஹாரம், மத்யஹாரம், மர்யாதி மஹா மர்யாதி என்று ஐந்துவிதம்.

இவைகள் தண்டமானத்தினுல் அளவிடப்படவேண்டும். அதாவது ப்ராசாதத்தின் அகல அளவுக்குத் தண்டம் என்று பெயர். இந்த தண்டமானத்தில் ½ தண்ட அகலமுள்ள ப்ராகாரத்திற்கு அந்தர்மண்டலம் என்று பெயர். ஒரு தண்ட அளவுள்ளதாக அந்தர்ஹாரத்தை அமைக்கவேண்டும். இரண்டு தண்டவிஸ்தாரத்தினுல் மத்தியஹாரத்தைச் செய்தல் நலம். மர்யாதியை நான்கு தண்டத்தினுலும் மஹாமர்யாதியை ஏழு தண்டத்தினுலும் செய்யவேண்டும் என்று காரணுகமம் ப்ராகார லக்ஷண விதி படலத்தில் கூறப்படுகிறது.

ஹஸ்தமானத்தாலும் ப்ராகாரம் அமைக்க விதி அங்கேயே காணப்படுகிறது. (இது பக்ஷாந்தரம்)

ப்ராசாதம் நாகரம் த்ராவிடம் வேசரம் என மூன்றுவிதமாகும். அதாவது,

नागरं द्राविडं चैव वेसरं च त्रिधा भवेत् ।
भूम्यादिस्थूपिपर्यंतं युगश्रं नागरं भवेत् ॥
वेदिप्रभृति चाष्टाश्रं द्राविडं चेति कीर्त्तितम् ।
कर्णप्रभृति वृत्तं यत् वेसरं परिकल्पयेत् ॥

— காரணுகமம்.

नागरं पुंविमानं स्याद्द्राविडं स्त्रीत्वमेव च ।
नपुंसकं वेसरं च त्रिधा प्रासादमुच्यते ॥

— காரணுகமம்.

பூமிமுதல் ஸ்தூபிவரையில் சதுரமாக இருக்கும் விமானத்திற்கு நாகரம் என்று பெயர். வேதி முதல் எண் கோணமாக இருக்கும் விமானத்திற்கு த்ராவிடம் என்று பெயர். கர்ணம் முதல் ஸ்தூபிவரையில் விருத்தமாக இருக்கும் விமானத்திற்கு வேஸரம் என்று பெயர்.

ப்ரஸ்தரத்திற்குமேல் மூலைகளில் விருஷபம் அல்லது பூதம் செய்யவேண்டும். பூதமானல் உட்கார்ந்ததாயும் அஞ்சலி செய்துகொண்டிருப்பதாயுமிருக்கவேண்டும். விருஷபமானல் சயனம் செய்துகொண்டிருப்பதாக இருக்கவேண்டும்.

விமானத்தில் கிழக்கில் குமாரனையும், தெற்கில் தக்ஷிண மூர்த்தியையும், மேற்கில் நரசிங்கம் அல்லது விஷ்ணுவையும், வடக்கில் பிரமதேவனையும் அமைக்கவேண்டும். மேற்குப்பார்த்த ஆலயமாக விருந்தால் மேற்கில் ஸ்கந்தனையும் கிழக்கில் கேசவனையும் மாற்றவேண்டும். மற்ற இரண்டும் மாருது.

விமானத்தின்மேல் வைக்கப்படும் ஸ்தூபியானது சுத்தமான தங்கத்தினல் அல்லது சுவர்ணத்தினல் அல்லது வெள்ளி தாமிரம் இவைகளாகப் பொருளுக்குத் தக்கவாறு செய்யவேண்டும். சுவாயம்புவலிங்கத்திற்கு, சுத்தமான தங்கத்தினல் செய்ய வேண்டும் அல்லது சுவர்ணத்தாலாவது செய்யலாம். (ஜாம்பூநதம் என்பது அபரஞ்சித்தங்கம். சுவர்ணம் என்பது அதற்கடுத்த படியில் உள்ளது) மற்றது மானுஷலிங்கம் முதலானவற்றிற்கு என்று ரௌரவாகமம் கூறுகிறது. அதாவது.

अथ वक्ष्ये विशेषेण मकुटादिविभूषणम् ।
शुद्धजांबूनदं चापि सौवर्णं रजतं तु वा ॥
ताम्रं वाऽपि प्रकर्तव्यं यथावित्तानुसारतः ।
स्वायंभ्वादिलिङ्गानां शुद्धजांबूनदेन तु ॥
सौवर्णं वा प्रकर्तव्यं अन्ये द्वे मानुषस्य तु ।

— ரௌரவாகமம்.

என்று மூலஸ்தான விமானத்திற்குச் சமமாகவோ அல்லது 1¼, 1½, 2, 3 பங்கு உயரமாகவே ஐந்து சாலைகளுடன் கூடியதாக கோபுரத்தை அமைக்கவேண்டும். இது சாதாரணம். விசேஷமாகவுள்ள கோபுரவிதிகளும் காணப்படுகின்றன.

[ தொடரும் ]

# மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்

திரு. செ. சின்னத்துரை B. A.,

" மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக் கியாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே "

இப்பரந்த மண்ணுலகத்தில் நல்லவண்ணம் குறைவிலாமல் வாழ்வதற்கு நல்லவழியிருக்கிறதெனத் திருஞானசம்பந்தப் பெருமான் வெகு ஆணித்தரமாகச் செப்புகிறார். திருக்கழுமலம் ஆகிய சீர்காழியில் எம்பெருமான் அம்மையாரோடு எழுந்தருளி யிருக்கிறார். அவரை மெய்யன்போடு வழிபடுங்கள், உங்களுக்கு ஒரு குறைவும் வராமல் குறைவிலா நிறைவாகிய - நிலையுள்ள பொருளாகிய எம்பெருமான் அருள் புரிவார் என்று மேற்படி தேவாரத்தில் ஞானச்செல்வர் பேசுகிறார்'

ஆன்மாக்களாகிய நாம் உய்யும்பொருட்டாகவும் இறவாத இன்பமாகிய வீட்டின்பத்தைப் பெறுவதற்காகவும் முதனூல்களாகிய வேதம் ஆகமம் இரண்டினையும் எல்லாம்வல்ல முழுமுதற்பொருளாகிய சிவபெருமான் வகுத்தியருளினார். வேதாகம நெறிநின்று வழுவாது வாழ்வோர் நல்ல பேரருளைப் பெறுவரென்பது திண்ணம். வேதம் எக்காலத்திலும் பொய்யாத - அழியாத நிறைவுள்ள நூல். அது காலத்துக்குக்காலம் தோன்றும் பூசல்களால் மாழாமல் என்னென்றைக்கும் புதுமைக்குப் புதுமையாய் நின்று மிளிரும் திவ்விய நூல். சில காலங்களில் அதன் ஒளிதேய இடம் இருந்தபோதிலும் அதன் பிரகாசத்தைப் புலப்படுத்தவும் நிலைநிறுத்தவும் ஞானிகளும் மகான்களும் தோன்றினார்கள். இன்னும் தோன்றுவார்கள். வேதம் உண்மைப் பொருள்; அது ஒரு போதும் அழியாது.

" வேதம் பசு அதன் பால் மெய்யாகமம் நால்வர்
ஓதும் தமிழ்அதனின் உள்ளுறு நெய் போதமிகு

நெய்யின் உறுசுவையாம் நீள் வெண்ணெய் மெய்கண்டான்
செய்ய தமிழ் நூலின் திறம்''

வேதம் பசுவென்றும், அதன்பால் ஆகமம் என்றும், சமய குரவர் நால்வர் ஓதிய தமிழ் மறைகள் பாலிலிருந்து தோன்றும் நெய்யென்றும், நெய்யின் உறுசுவைதான் மெய்கண்ட சாத்திரம் பதினான்கென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே வேதாகமங்களிலும் பன்னிரு திருமுறைகளிலும் பதினான்கு சாத்திரங்களிலும் கூறப்பட்டவை எக்காலத்திலும் அழியாத பேருண்மைகளை எடுத்துக் காட்டும் பெருமைமிக்க கலங்கரை விளக்குப் போன்றவை. அவற்றில் கூறப்பட்டிருக்கும் உண்மைகளின்படி நாம் ஒழுகவேண்டும். அவற்றின் நெறியில் நின்றும் தவறினால் கேடே விளையும். துன்பமேவரும்.

'' அருளினால் உரைத்த நூலின்வழி வாராதன்ம ஞ்செய்யின்
இருளுலா நிரயத்துன்பத்து இட்டிரும் பாவந் தீர்ப்பான்
பொருளுலாஞ் சுவர்க்கம்ஆதி போகத்தால் புணியந் தீர்ப்பன்
மருளுலாம் மலங்கள் தீர்க்கும் மருந்திவை வயித்தியநாதன் ''

என சிவஞான சித்தியாரில் கூறப்பட்டிருக்கின்றது. வேதாகம நூல்வழி நில்லாமை பாவம் நூல்வழி நின்று அருள்வழி நில்லாமை புண்ணியம். இரண்டும் உயிர்க்கு நோயாகலான் அவற்றாற் பந்தமுறுமைப் பொருட்டு சிவபிரானாகிய வயித்தியநாதன் இன்ப துன்பங்களாகிய மருந்தை நுகர்விப்பன்.

(தொடரும்)

# செய்திகள்

## திருக்குவளையில் நெல் மகோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான 'திருக்குவளை' என்னும் திருக்கோளிலி ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வண்டமரும் பூங்குழலம்மை சமேத ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமி சுந்தரமூர்த்தி நாயனருக்கு நெல்லட்டிக் கொடுத்த அருட்செயலை விளக்கும் நெல் மகோற்சவம், 1—3—69 சனிக்கிழமை முதல், 5—3—69 புதன்கிழமை முடிய ஐந்து நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. சுந்தரர் நெல் பெற்ற நிகழ்ச்சி உற்சவங்கள் ஞாயிறு, திங்கள், செவ்வாய் மூன்று நாட்களிலும் முறையாக நிகழ்ந்தன. ஞாயிறு இரவு பஞ்சமூர்த்திகள் வசந்த மண்டபத்திற்கு எழுந்தருளலும், திங்கள் காலை பஞ்சமூர்த்திகளும் சந்திர நதியில் தீர்த்தங் கொடுத்தலும், செவ்வாய் காலை ஸ்ரீ கல்யாணசுந்தரர் வசந்த மண்டபத்திற்கு எழுந்தருளலும், புதன் காலை நிர்மாலிய தரிசனமும் நடைபெற்றன. சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன.

## மகாசிவராத்திரி வழிபாடு

மாசிமீ 4௳ (15—2—69) சனிக்கிழமை மகாசிவராத்திரியன்று, திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீர்காழி, வைத்தீசுவரன்கோயில், திருக்கடவூர், திருநள்ளாறு, திருத்தருமபுரம் முதலான பல தேவஸ்தானங்களிலும் இரவு நான்கு காலமும் மகாபிஷேக அலங்கார தீபாராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் தங்கள் ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு நான்கு காலங்களிலும் விசேஷ அபிஷேக அலங்கார தீபாராதனைகளுடன் வழிபாடு செய்து மகிழ்ந்தார்கள். ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கும், ஸ்ரீ அபயாம்பிகா சமேத ஸ்ரீ தருமபுரீசுவர சுவாமிக்கும், ஸ்ரீ அஷ்டாதச புஜ மகாலட்சுமி துர்க்காதேவிக்கும், ஸ்ரீ வனதுர்க்கைக்கும் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பெற்றன. அடியார்கள் தரிசித்துப் பயன்பெற்றனர்.

இலவச சித்த வைத்திய சாலை

# குன்ம ரோகம் (அஜீர்ண ரோகம்)

டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

(மலர் 28, இதழ் 3, பக்கம் 173 இன் தொடர்ச்சி)

**சிகிச்சை:**

பெரும்பாலும் இந்த ரோகத்தை உடையவர்கள் தங்கள் சரீர உழைப்புக்குத் தக்கவாறு ஆகாரத்தை மாற்றி அமைத்துக் கொண்டால் வியாதி போய்விடுகிறது. அதி பத்திய உணவு, மிதமிஞ்சிய உணவு, புகையிலை மதுபானம் ஆகிய பழக்கங்களை மாற்றிக்கொண்டால் இந்த வியாதி போய்விடுகின்றது. விரைவில் ஜீரணமாகும் உணவுகளையே சாப்பிடுவது மிகவும் நல்லது. அதாவது பால், ஆரோரூட், நொய்கஞ்சி போன்ற வற்றை சாப்பிட்டால் அவை எளிதில் ஜீரணமாகும். கிரை இனங்கள், மந்தப்படுத்துகின்ற பதார்த்தங்கள், தோசை முதலிய எண்ணெய்ப் பதார்த்தங்கள் முதலியவைகளை நீக்க வேண்டும். குன்மரோகம் உடையவர்கள் முக்கியமாக சாப்பிட்டபிறகு சற்றுநேரம் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நரம்புகளின் சக்தி எங்கும் வியாபிக்காமல் இரைப்பையிலேயே நின்று ஜீரணம் சரியானபடி ஆகும். இவ் வியாதிக்காரர்களுக்கு அதிக வேதனை ஏற்படும்போது சிறிது அபின் கொடுத்து தூங்கவைப்பது நல்லது. வேதனையோடு வாந்தியும் ஏற்பட்டால் சிறிது சோடா நீரில் சிறிது பூனீர் உப்பு அல்லது தெளிந்த சுண்ணாம்பு நீர் கொஞ்சம் கலந்து கொடுப்பது நல்லது. அதிக வேதனை உண்டானால் சிறிது வெந்நீரைக் கொடுத்து வாயில் விரலைவிட்டு வாந்தி எடுப்பதும் நல்லது. சோடா முதலிய உப்புக்களை அதிகம் கொடுக்கக்கூடாது. வாந்தி யில்லாமல் இருக்கும்போது நிலவேம்பு வேப்பம்பட்டை முதலிய கசப்பு மருந்துகளைக்கொடுத்து அந்த வியாதியைச் சாந்தப்படுத் தலாம். மலபந்தம் இருந்தால் ரேவல்சினி, ஆமணக்கெண்ணை, நிலவாகை முதலிய லகுவான பேதி மருந்துகளைக் கொடுத்து மலச்சிக்கலைப் போக்கலாம். அதன்பின் அயம் காந்தம் போன்ற செந்தூரங்களைக் கொடுத்தும் பஞ்சதீபாக்கினி சூரணம் கொடுத் தும் வருவது நல்லது. அவையாவன சுக்கு, மிளகு, அரிசிதிப்பிலி,

சீரகம், ஏலரிசி இவைகளைச் சம அளவுகொண்டு இளவறுப்பாக வருத்து இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு சாப்பிடுவதாகும்.

குன்ம வியாதியால் கஷ்டப்படுகிறவர்கள் (1) வெறும் வயிற்றில் வலி ஏற்பட்டால் தண்ணீர் சாப்பிட்டால்கூட வலி நின்றுவிடும். (2) சாப்பிட்ட உடனே வலி ஏற்பட்டு ஜீரணமாகின்ற வரையில் வலித்துக்கொண்டேயிருக்கும். அல்லது வாந்தி எடுத்தால் நின்றுவிடும். இப்பேர்ப்பட்ட நோய் உடையவர்களுக்கு ரேவல்சினி, இந்துப்பு, கடுகு, மிளகு, ஆகிய இவைகளில் ஒன்றை விதிப்படி சாப்பிட்டுவந்தால் - ஆகாரம் சாப்பிடுவதற்கு முன் கொடுத்துக்கொண்டு வந்தால் இது குணப்படும். (3) ஆகாரம் சாப்பிட்டு இரண்டிலிருந்து நான்கு மணி நேரம் சென்ற பிறகு அதிக வலியுண்டுபண்ணும். ஆனல் அவ்வலி சிறிது நேரம்தான் இருக்கும். அதற்கு அன்னபேதி செந்தூரம், மூஷாம்பரம் திரிகடுகு சூரணம் ஆகிய இவைகளைக் கொடுத்து வந்தால் அவ்வலி நின்றுவிடும். (4) சதா எக்காலத்திலும் அடிவயிற்றைச் சுருட்டி வலிப்பதுபோன்றிருக்கும். இந்த குன்மம் பெரும்பாலும் ஸ்திரீகளுக்குத்தான் ஏற்படும். இப்படிப் பட்ட வியாதிகளுக்கு கடுகை அரைத்து வயிற்றின்மேல் பற்று போடலாம். சிறு அளவில் அபின் சாராயம் முதலிய போதை தரும் பொருட்களைக் கொடுத்து பஞ்சதீபாக்கினி சூரணம் சாப்பிட்டு வந்தால் குணம் உண்டாகும் அல்லது மிளகாய்த் தூள் 1 வராகனிடை, ரேவல்சினி தூள் 2 வராகனிடை இரண்டையும் ஒன்று கலந்து கோதுமை ரொட்டி உள்சத்தைக் கலந்து சிறு சிறு மாத்திரைகளாக்கி ஒன்றிரண்டு மாத்திரை ஆகாரம் சாப்பிடுவதற்கு அரைமணி நேரத்திற்கு முன் சாப்பிட்டுவந்தால் குணம் ஏற்படும்.

நெஞ்சில், அடிவயிற்றில் சதா எரிந்துகொண்டே இருக்கும். எரி குன்மம் போன்ற சூலை எரிச்சலுக்கு சுண்ணாம்பு தெளிந்த ஜலத்தில் சிறிது பால் சேர்த்து காலை, மாலை உட்கொண்டு வந்தால் எரிச்சலை நிறுத்திவிடும். இஞ்சி ஆரஞ்சுபழத்தோல் இவைகளைக் கஷாயமாகச்செய்து சாப்பிடுவதும் நல்லது.

மேற்கண்ட வியாதிகளுக்கு ஆங்கில வைத்தியர்கள் பொதுவாக சிரணக்கோளாறு என்றும் வயிற்று வேக்காடு (Chronic Gastritas) என்றும் வயிற்றுப்புண் (Gastic ulcer) என்றும்

வயிற்று கட்டி (Gastric Tumour) என்றும் கிரகணிப்புண் (Duadenal ulcer) என்றும் பல பெயரிட்டு அழைக்கிறார்கள். மேல்நாட்டு வைத்திய நூல்களில் மேல் குறிப்பிட்ட வியாதிகளுக்கு அதன் மூல காரணத்தைப்பற்றி நிச்சயமாக ஒன்றும் கண்டு பிடிக்கப்படவில்லை. வயிற்றில் நீர் சுரப்பு அதிகமாவதாலும், குறைவதாலும் இந்த வியாதி ஏற்படுகிறது என்றும் மேற்படி சுரப்பு அதிகமாவதற்கும் குறைவதற்கும் காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் சொல்லுகிறார்கள். இதற்கு ஒரே ஒரு சிகிச்சை அறுவை சிகிச்சை என்பதுதான், அவர்கள் சித்தாந்தம். ஆனால் சித்த முறைப்படி இந்த வியாதிக்கு மருந்து கொடுத்தே பூரண குணம் அடையலாம்.

ஆனால் சித்த ஆயுர்வேத முறைப்படி இவ்வியாதிக்கு காரணம் வயிறு முதலிய அவயவங்களின் உள்பாகம் வறட்சியுற்று அவ்வறட்சியினால் உட்புறத்தில் வலியும் கரடுமுரடான முடிச்சுகளும் உண்டாவதுதான் காரணமென்றும். நிச்சயமாகக் கூறுகின்றார்கள். இவ்வறட்சிகள் உண்டாவதற்குக் காரணம் வறண்ட உணவுகளை, அதாவது நெய், எண்ணெய், கொழுப்பு பதார்த்தங்கள், திரவ சம்பந்தமான உணவுகளை அடிக்கடி உட்கொள்ளுதல், பசி வேளையில் சாப்பிடாமல் பசியை அடக்குவது, உடல்வறட்சி ஏற்படக்கூடிய வேலைகளைச்செய்வது, வறட்சியான சீதோஷ்ண நிலையில் அதிகமாகப் பழகுவதும் உடலில் நைப்பு உண்டாவதற்கான பழக்கமான எண்ணை தேய்த்துக் கொள்ளுதல் போன்ற பழக்கங்களை விட்டுவிடுவதும் பலஹீனமாக இருக்கும்போது அதிகமாக வாயு பதார்த்தங்களை சாப்பிடுவதும் உடம்பை நைப்பாக வைத்துக் கொள்ளாமல் அடிக்கடி பேதி சாப்பிடுவதும் மல, மூத்திர வேகங்களை அடக்குவதாலும் மேற்கண்ட வியாதிகள் உண்டாகின்றன. மேற்படி வியாதிக்கு மூலாதாரம் வறட்சியாகும். வறட்சியை உண்டாக்குவது வாதமாகும். அக்கினி பலத்தின் சமமின்மையால் வாதம் அதிகரிக்கிறது. ஆகையால் இவ்வியாதிக்கு மூல காரணங்களை அறிந்து உடம்பில் நைப்பை உண்டாக்கி அதற்கு ஒத்தாற்போல் லகுவான ஆகாரங்களைப் புசித்து அக்கினி தீபமான மருந்துகளை உட்கொண்டாலும் அல்லது உப்புக்கள் க்ஷார வகைகள் இவைகளால் வாயுவை கலைத்து மேற்படி வியாதியைக் குணப்படுத்தலாம்.

சகல விதமான குன்மங்களுக்கும் கீழ்க்கண்ட மருந்து சாமான்களைச் சூரணமாகச் செய்துவைத்துக்கொண்டு சாப்பிட்டு வந்தால் ஆங்கில மருத்துவ முறைப்படி வயிற்றைக் கிறிக்கொள்ளாமல் குன்ம வியாதிக்கு ஒரு பெரிய முழுக்குப்போட முடியும்.

சுக்கு, மிளகு, ஓமம், சீரகம், பொரித்த வெங்காரம், பொரித்த படிகாரம், வறுத்தபொட்டிலுப்பு, கடுக்காய்த்தோல், நிலவாகை, ரேவல் சினி முதலிய சாமான்களை வகைக்கு 1பலம்வீதம் வாங்கி அவைகளை இளவறுப்பாக வறுத்து அத்துடன் பெருந்தும்பை கொழுந்து 1 படி நிழலில் உலர்த்தி அதையும் இடித்து வஸ்திர காயம் செய்து யாவற்றையும் கலந்து வைத்துக்கொண்டு அதைக் காலை, மாலை 1 டீஸ்பூன் அளவு வாயில்போட்டு எருமை மோர் சாப்பிட்டு வந்தால் இந்தக் கொடிய ரோகம் நீங்கும்.

## விசேஷ நாட்கள்

### 10—3—69 முதல் 10—4—69 முடிய

| | |
|---|---|
| 12—3—69 | காரி நாயனார் திருநக்ஷத்திரம் |
| 14—3—69 | காரடையான் நோன்பு (காலை $6\frac{1}{2}$ மணிக்குள்ளாக) |
| 15—3—69 | பிரதோஷம் |
| 16—3—69 | தண்டியடிகள் நாயனார் திருநக்ஷத்திரம் |
| 19—3—69 | யுகாதிப் பண்டிகை; வசந்த நவராத்திரி ஆரம்பம். |
| 23—3—69 | வேலூர்க் கிருத்திகை |
| ,, | நேச நாயனார் திருநக்ஷத்திரம் |
| 26—3—69 | கணநாத நாயனார் திருநக்ஷத்திரம் |
| 27—3—69 | வசந்த நவராத்திரி பூர்ணாகுதி. |
| 28—3—69 | கட அபிஷேகம். |
| 28—3—69 | முனையடுவார் நாயனார் திருநக்ஷத்திரம் |
| 31—3—69 | பிரதோஷம் |
| 2—4—69 | பங்குனி உத்திரம் |
| 4—4—69 | காரைக்கால் அம்மையார் திருநக்ஷத்திரம் |

# எதிர்காலம் - திரு. K. முத்துஜோதிடர்

( கீலக௵ பங்குனிமீ 1௳ முதல் 30௳ முடிய )

(14—3—69 முதல் 12—4—69 முடிய)

**1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

மேஷ ராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத்தரும். விசேஷமான தனதான்ய விருத்திகளும் ஏற்படச்செய்யும். கிரய விக்ரய லாபங்களும், தொழில் அபிவிருத்தியும், சுபசோபனுதிகளும், பெரியோர்களின் ஆசிகளும் கிடைக்கச்செய்யும். தொழில் ஓங்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

**2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசிர்ஷம் ½**

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். தொழில் ஸம்பந்தமாய் அடிக்கடி மாறுதல் உண்டுபண்ணும். தூர தேசத்தில் இருந்து அழைப்புப்பத்திரம் கிடைக்கும். ஆஸ்திகம் ஓங்கும். தெய்வம் முன்னின்று காக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிதுன ராசி 9 பாதங்களும் சுபமாகவே இருக்கும். ஆரோக்யம் தரும். ஸ்தாவர ஜெங்கம சொத்துக்கள் சேரும். உத்தியோக லாபம் ஏற்படும். உலக பிரஸித்தியைத் தரும். ஸகல காரியங்களும் ஸித்தியாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்**

கடக ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். சில துஷ்டர்களுடைய சேர்க்கை ஏற்படும். உடனே அது பெரியோர்களுடைய பலத்தால் நிவர்த்தியாகிவிடும். நூதனமாக ஸ்திரம் இல்லாமல் ஜீவனம் ஏற்படும். குடும்பத்தில் கலகம் காட்டும். விவசாயத்தில் புதிய முறையால் லாபம் ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. **சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$**

சிம்ம ராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். ஜீவனத்தில் லாபம் உண்டுபண்ணும். பிரதானமாக, பதவி ஏற்படும். கீர்த்திப் பத்திரம் கிடைக்கும் அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். குடும்பம் ஓங்கும். தெய்வ பலம் காக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

6. **கன்னி - உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$**

கன்னியா ராசி 9 பாதங்களும் விஜயத்தையும், லாபத்தையும் தரும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் வந்து சேரும். கீர்த்திப் பத்திரம் கிடைக்கும். சஞ்சார பலன் அதிகமாகும். தெய்வபலம் ஓங்கும். நூதன முறையில் தொழில் செலவினங்கள் விருத்தியாகும். குடும்பம் விருத்தியாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

7. **துலாம் - சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$**

துலா ராசி 9 பாதங்களும் சுப சந்தோஷத்தைத் தரும். யக்ஞயாகாதி பலன்களை விசேஷமாகத் தரும். குடும்பத்தில் மங்கள காரியங்கள் ஏற்படும். கடன், வியாதி, சத்துருக்கள் முதலியவைகள் நிவர்த்தியாகும். ஆரோக்கியம் தரும். தெய்வ சக்திப் பிரகாசிக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

8. **விருச்சிகம் - விசாகம் - $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை**

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். எந்தக் காரியமும் தாமதமாகவே நடக்கும். கொஞ்சம் கொஞ்சமாக நஷ்டமான பொருள்கள் வந்து சேரும். இடம் மாறும்படி செய்யும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். ஆரோக்கியம் தரும். வெள்ளி, சனி சுபமாகும்.

9. **தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$**

தனுர் ராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுப பலனைத் தரும். விவகாதி மங்கள காரியங்கள் நடக்கும். உத்தியோகத்தில் உயர் பதவி ஏற்படும். நூதன முறையில் தொழில் லாபம் உண்டு பண்ணும். சபையில் பூசிக்கும் தன்மையும், வெகு ஜனங்களின் ஆதரவும் ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுப பலனைத் தரும். உத்தியோகத்தில் கீர்த்தியும், மேல் பதவிகளும் கிடைக்கும். வியவசாயம் முதலியவைகளால் லாபம் கிடைக்கும். இல்லற சுகம்ஓங்கும். வெகுநாளாகத் தீராதவியாதி நீங்கி ஆரோக்கியம் உண்டாகும். இராஜாங்கத்தில் சிநேகம் ஏற்படும். செவ்வாய், புதன் சுபமாகும்.

## 11. கும்பம்-அவிட்டம் ½. - சதயம் - பூரட்டாதி ¾.

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்சிரமானபலனைத்தரும். வியாதி குணமடையும். இடம் மாறுதல் உண்டுபண்ணும். குடும்பம் தழைக்கும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். தெய்வபலம் பிரகாசிக்கும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். சகல காரியங்களும் சித்தியாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் சுபத்தையேதரும். வித்யை விருத்தியாகும். ஆரோக்கியம் உண்டுபண்ணும் சுப காரியங்கள் நடக்கும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். நூதனமாக கூட்டுத் தொழில் ஏற்பட்டு விசேஷமான லாபம் தரும். உலகப் பிரசித்தி ஏற்படும். சகல காரியமும் சாத்தியமாகும். சனி, ஞாயிறு சுபமாகும்

குறிப்பு :- மேற்படி பங்குனி மாதம் 6 ஆம் தேதி புதன்கிழமை (19—3—69) சாந்திரமான சைத்திர சுத்த பிரதமையும் உத்திரட்டாதி நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் வஸந்த ஸ்ரீ தேவி நவராத்திரி ஆரம்பமாகி, மேற்படி பங்குனி மாதம் 14 ஆம் தேதி வியாழக்கிழமை (27—3—69) நவமியும் புனர்வசு நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் ஸ்ரீ வசந்த நவராத்திரி மகோற்சவம். மகாயக்ஞம், மகாபூர்ணாகுதி வைபவம் நடைபெறும்.

மேற்படி பங்குனி மாதம் 15 ஆம் தேதி வெள்ளிக்கிழமை (28—3—69) விஜயதசமி. புஷ்ய நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் காலை மணி 9-30 க்குமேல் 10·30 க்குள் விருஷப லக்னத்தில் யாக சாலையில் இருந்து கடம் எழுந்தருளியாகி ஸ்ரீ பராசக்திக்கு கடாபிஷேக மகோற்சவம் நடைபெறும். ஸ்ரீ பராசக்தியின் அருளால் உலகெல்லாம் சந்தோஷத்தோடும், சுபிக்ஷத்தோடும், ஆரோக்கியத்தோடும், அமைதியாகவும் பிரஜைகள் இருந்து கொண்டு சௌக்கியம் அடைவார்கள். சுபம் உண்டாகும்.

Letter

Lt. Governor.
PONDICHERRY.

Raj Nivas,
Pondicherry.
February 24, 1969.

Your Holiness,

I am grateful to you for giving me an opportunity to visit the temple of Lord Shiva at Vaitheeswarankoil yesterday on my way back to Pondicherry from Karaikal. The special Pooja and Abisheka offered to the Lord attracted me very much. I am sure you Holiness has taken special interest and arranged the Pooja for the benefit of the Public. I extend my grateful thanks to your Holiness and other Swamijis in the Mutt for the sacrifice and selfless service rendered for the benefit of the Public and also the hospitility rendered to me and to those who accompanied me during my visit to the temple.

With Pranams,

Yours Sincerely,
(B. D Jatti).

His Holiness Sri-La-Sri
Kovilan Guru Maha Sannithanam,
Dharmapuram Adhinam,
Mayuram.

மதிப்புரை :

## "வள்ளுவன் என்தோழன்"

இது தமிழின் மறுமலர்ச்சிக் காலம். பாட்டிலும், உரையிலும் புதிய புதிய படைப்புக்கள் புதுப்புது வகையில் மிக வேகமாகத் தோன்றிப் பெருகி வளர்ந்து வருவது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. ஆயினும், இத்தகைய படைப்பில், சொல்லாலும், பொருளாலும், கருத்தாலும் அறிஞர் உலகைக் கவர்வோர் சிலரேயாவர். அவர்களது படைப்பு அறிஞரது அறிவிற்கு நல்விருந்தாய் அமையும். மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் செஞ்சொற்கொண்டல், வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனுர், எம். ஏ., டிப். லிங்., அவர்கள் படைத்துள்ள 'வள்ளுவன் என் தோழன்' என்னும் கவிதை அஞ்சலி அத்தகைய சிறப்புடையதாய் இருத்தலைக் கண்டு மகிழ்ந்தோம். இக்கவிதைநூல் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், டாக்டர், தே. பொ. மீனுட்சி சுந்தரனுர் அவர்களது வாழ்த்துரையையும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர், டாக்டர் மு. வரதராசனுர் அவர்களது அணிந்துரையையும் முதலில் கொண்டு விளங்குகிறது.

செஞ்சொற்கொண்டல் அவர்கள் திருவள்ளுவரைப் பல வகையில் தம்முடன் தொடர்புபடுத்திக்கொள்கிருர். ஒவ்வொரு வகையிலும் ஒவ்வோர் இன்பம் உள்ளது. அவற்றுள் முதலாவது வகை 'வள்ளுவன் என் தோழன்' என்பது. இதுவே இந்நூலின் பெயராகக் கொள்ளப்பட்டது. திருவள்ளுவரையன்றி மற்றும், 'இயற்கை, வாழ்வியல், சான்றோர், ஆங்கிலத் தழுவம் முதலிய வற்றையும் ஆசிரியர் இதன்கண் தந்துள்ளார். காதலும் இடம் பெற்றுள்ளது.

இவைகளிலெல்லாம் ஆசிரியர் தமது ஆழ்ந்த கருத்துக்கள் பலவற்றையும், குறிக்கோள்களையும் அவை தாமே விளங்கும் வகையில் அமைத்துள்ளார். இனிய தமிழில் எளிய நடையில் அமைந்துள்ள பாட்டுக்கள் இசையின்பத்துடன் நீரோட்டம் போல ஓடுவது, ஆசிரியருடைய இயற்கை கவித்திறத்திற்கு எடுத்துக்காட்டாகும். இதனை ஆசிரியர் திருவள்ளுவர் இரண்டாயிரமாண்டு நினைவு அஞ்சலியாக ஆக்கியுள்ளமை போற்றத் தக்கது. இந்நூல் இளைஞர்கட்கும், முதியோர்க்கும் பலவகையில் பயன் தரத்தக்கதாகும். விலை தனிப்பிரதி ரூ. 3—00. (சி. அ.)

கிடைக்குமிடம் :-

வித்துவான். சொ. சிங்காரவேலன் M. A.,
சேந்தமிழ் நூலகம், தருமபுரம், மாயூரம்.